# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 163 சுபகிருது வருடம், தை மாதம் 23ஆம் திகதி திங்கட்கிழமை (06.02.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ரஜப் - 14, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## முஷாரப் காலமானார்



பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் உடல்நலக் குறைவு காரணமாக தனது 79ஆவது வயதில் நேற்று (05) காலமானார். அவர் டுபாயிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தபோது உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. 02 பக்கம்

## உஷ்



ஜனாதிபதி ரணிலின் அக்கிராசன உரை எதிர்வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெறும்போது அதனை பகிஷ்கரிக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளதாம்.

அதேபோல அது தொடர்பான விவாதம் நடைபெறுமாயின் அதிலும் கலந்துகொள்ளாதாம் ஐக்கிய மக்கள் சக்தி.

ஆனால், இப்படி செய்யாமல் நாடாளுமன்றத்திற்கு சென்ற அவற்றில் கலந்துகொள்ளவேண்டுமென வலியுறுத்தியுள்ளாராம் ராஜித சேனாரத்ன எம்.பி.

# வரிகளில் திருத்தம்!

## தொழில்சார் நிபுணர்களின் எதிர்ப்புக்கு அடிபணிந்தது அரசு

• நமது நிருபர்




சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அறிவிக்கப்பட்ட பல முக்கியமான வரிகளில் திருத்தங்களைச் செய்வதற்கு அரசாங்கம் அவசர கவனம் செலுத்தியுள்ளது.

அதிகபட்ச வரி விதிப்பு தொடர்பில் சில தொழில் நிபுணர்கள் கடும் ஆட்சேபனை தெரிவித்ததையடுத்து, ... 02 பக்கம்



நாட்டின் 75ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு Path to Freedom கண்காட்சியை கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் ஆரம்பித்துவைத்தார். இந்தக் கண்காட்சி எதிர்வரும் 10ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

## லிட்ரோ எரிவாயு விலை அதிகரிப்பு

•நா.தினுஷா

சமையல் எரிவாயுவுக்கான விலை நேற்று (05) நள்ளிரவுமுதல் அதிகரிக்க லிட்ரோ நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கமைய, 12.5 கிலோ கிராம் நிறையுடைய சமையல் எரிவாயு 334 ரூபாவாலும்,... 02 பக்கம்

LITRO GAS

## சஜித் அணியில் சந்திம எம்.பி.

### காலி தேர்தல் மேடையில் இணைந்தார்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி ஹினிதுமவில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டத்தில் கலந்துகொண்டு... 02 பக்கம்

## சித்தி கொடுமைப்படுத்துவதை பொலிஸாரிடம் கூறிய சிறுமி

### நான்கு கிலோ மீற்றர் நடந்துவந்து முறைப்பாடு

•கே. சுபானி

சித்தியின் கொடுமை தாங்க முடியாத 11 வயது சிறுமியொருவர் 4 கிலோமீற்றர் கால் நடையாக பயணித்து பொலிஸில்... 02 பக்கம்

## ஆணைக்குழுவை அதிரச்செய்த பொலிஸாரின் தேர்தல் செலவு



எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பணிகளில் ஈடுபடுவதற்காக பொலிஸ் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடுகள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு திறைசேரியிடம் ஆட்சேபனைகளை முன்வைக்கவுள்ளது. 02 பக்கம்

## வங்குரோத்து அரசில் பயணம் செய்ய ரணிலால் முடியாது லக்ஷ்மன் எம்.பி. தெரிவிப்பு



•நா.தினுஷா

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த வங்குரோத்து அரசாங்கத்துடன் தொடர்ந்து பயணிக்க முடியாது. மக்களின் நிலைப்பாடு என்னவென்பது இந்த... 02 பக்கம்

## 77 கோடி ரூபா இம்மாதம் தேவை

### அமைச்சிடம் கோரியது தேர்தல் ஆணைக்குழு

•கே. சுபானி



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்காக இம்மாதம் 77கோடி ரூபா வழங்குமாறு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜீ. புஞ்சிஹேவா நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்குத் தேவையான அடிப்படைச் செலவு தொடர்பில் மதிப்பீடு செய்துள்ள நிலையில், இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இத்தொகையை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு நிதி அமைச்சிடம் தேர்தல் ஆணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.

இதற்கு முன்னர் தேர்தல் செலவுகளுக்காக 4 கோடி ரூபாவை தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதியமைச்சு பெற்றுக்கொடுத்துள்ளது.

இந்நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு முழுமையாக 400 கோடி ரூபா செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 75ஆவது சுதந்திர விழாவை முன்னிட்டு இந்திய அரசாங்கம் பஸ்கள் அன்பளிப்பு

நாட்டின் 75ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு இலங்கையின் கிராமப்புறங்களில் பொதுப் போக்குவரத்து சேவையை வலுப்படுத்த இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள 500 பஸ்களில், 50 பஸ்கள் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (05) முற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அடையாள ரீதியிலாக கையளிக்கப்பட்டன.

இதற்கான ஆவணங்களை இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பக்லே, ஜனாதிபதியிடம் கையளித்தார்.

நாடாக்களை வெட்டி இரண்டு பஸ்களை திறந்துவைத்த ஜனாதிபதி, இந்தியா கையளித்த பஸ்களைப் பார்வையிட்டார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி... 02 பக்கம்



## இலங்கைக்கு எதிராக லண்டனில் போராட்டம்




இங்கிலாந்தின் இலண்டன் மாநகரில் இலங்கை தூதரகத்திற்கு முன்னால் நேற்றுமுன்தினம் புலிக் கொடிகள் சகிதம் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை கறுப்பு தினமாக இலங்கையில் வடக்கு, கிழக்கில் அனுஷ்டித்து... 02 பக்கம்

## இந்திய அரசாங்கத்தின் 10,000 வீட்டுத்திட்டம்

### மலையகத்தில் விரைவில் ஆரம்பிக்கப்படுமென அமைச்சர் ஜீவன் தெரிவிப்பு



மலையகத்துக்கான இந்திய அரசின் 10 ஆயிரம் வீட்டுத்திட்டம் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படும். கட்சி, தொழிற்சங்கப் பேதங்களின்றி பயனாளிகளுக்கு உரிய வகையில் வீடுகள் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை... 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...

13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்த வேண்டாமெண்டு இந்தியா கொடுத்த பஸ்ஸில ஏறிவந்தே ஆர்ப்பாட்டம் செய்வாங்கள் இவங்கள்..!






# நிலக்கரி தட்டுப்பாடு ஏற்படும் சாத்தியம் ஏப்ரலில் நிலைமை மோசமடையலாம்

## நிலக்கரி நிறுவனம் எச்சரிக்கை



**நா. தினுஷா**

நாட்டுக்கு இறக்குமதி செய்ய திட்டமிடப்பட்டிருந்த 33 நிலக்கரி கப்பல்களில் அநேகமான கப்பல்களுக்கு முறையான கட்டணம் செலுத்தப்படாமையினால் நிலக்கரி தட்டுப்பாடு ஏற்படுவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகரித்திருக்கின்றன. மின்சார சபை உரிய நேரத்தில் கொடுப்பனவுகளை முறையாக செலுத்தாமையின் காரணமாக, நிலக்கரிக்காக இந்த வாரத்தில் மாத்திரம் 15.34 பில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளது.

எனவே, தேவையான நிதியை உரிய நேரத்தில் பெற்றுக்கொடுக்காவிட்டால் ஏப்ரல் 25 – 30 திகதியாகும்போது பாரதூரமான நெருக்கடியை சந்திக்க நேரிடும் என்றும் நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்துக்கு தேவையான நிலக்கரியை விநியோகிக்க முடியாது போகுமென்றும் நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் செஹான் சுமனசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (05) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2022 மற்றும் 2023ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு தேவையான 33 நிலக்கரி கப்பல்களில், 11 கப்பல்கள் தரையிறக்கப்பட்டுள்ளன. இந்த நிலக்கரி இறக்குமதிக்கு தேவையான நிதியை மின்சார சபையே பெற்றுக்கொடுக்கும். ஒவ்வொரு காலத்திலும் தேவையான ரூபாக்களை மின்சார சபையிடமிருந்து பெற்றுக்கொண்டு, மத்திய வங்கியின் ஒத்துழைப்புடன் அதனை டொலர்களாக பெற்றுக்கொள்வோம். ஆனால், கடந்த சில நாட்களை அவதானித்தால் ஜனவரி மாதம் 30ஆம் திகதியிலிருந்து பெப்ரவரி மாதம் 03ஆம் திகதி வரையில் மூன்று நிலக்கரி கப்பல்களுக்கு பணம் செலுத்த வேண்டியிருந்தது. 31ஆம் திகதி 30 சதவீத கொடுப்பனவாக ஒரு கப்பலுக்காக 1.35 பில்லியன் ரூபா செலுத்தியிருந்தோம். இருந்தபோதும் நாட்டுக்கு வரவிருக்கும் 12ஆவது கப்பல் உள்ளிட்ட இரு கப்பல்களுக்கும் 70 சதவீத கொடுப்பனவும், தரையிறக்கவேண்டியுள்ள கப்பல்களுக்கு 30 சதவீத கொடுப்பனவை செலுத்த வேண்டியிருந்தது. இந்த கொடுப்பனவுகளை கடந்த வாரம் வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமையில் செலுத்தியிருக்க வேண்டும்.

ஆனால், மின்சார சபை எங்களுக்கு தேவையான நிதியை வழங்காததால் குறித்த இரு கப்பல்களுக்குமான கொடுப்பனவுகளை மீளச் செலுத்த முடியாமல் போயுள்ளது. மேலும், ஏனைய இறக்குமதிகளுக்காக 4ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் 10ஆம் திகதி வரை 10.74 பில்லியன் ரூபா நிதி தேவைப்பாடாக இருக்கிறது. இந்த விடயங்கள் குறித்து இதற்கு முன்னே மின்சாரசபையுடன் இணக்கப்பாட்டுக்கும் வந்திருக்கிறோம்.

இதேவேளை, கடந்த வாரம் செலுத்த முடியாத கப்பல்களுக்கு 4.6 பில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளது. எனவே, அடுத்த கட்ட கொள்வனவு நடவடிக்கைகளுக்காக 15.34 பில்லியன் ரூபா அவசியமாக இருக்கிறது. இந்த தொகையை எதிர்காலத்தில் எங்களால் செலுத்த முடியாத நிலைமைக்கு நாங்கள் தள்ளப்பட்டிருக்கிறோம்.

அடுத்த கட்டத்துக்கு போதியளவு பணம் எங்களுக்கு கிடைக்காவிட்டால் கப்பல்களுக்கான தாமத கட்டணத்தை நிலக்கரி நிறுவனத்துக்கு செலுத்த வேண்டி ஏற்படும். மேலும், நிலக்கரி ஏற்றப்படவுள்ள கப்பல்களுக்கான கட்டணங்களை செலுத்தும் நடவடிக்கைகளை காலதாமதமானால் ஏப்ரல் 25 – 30ஆம் திகதியாகும் போது பாரதூரமான நெருக்கடியை சந்திக்க நேரிடும். அதேபோன்று தேவையான நிலக்கரியை இறக்குமதி செய்யும் நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்படும். அதனூடாக நுரைச்சோலை அனல் மின் நிலையத்துக்கு தேவையான நிலக்கரிக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடும். எனவே உடனடியாக இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். தேவையான நிதியை நிலக்கரி நிறுவனத்துக்கு பெற்றுக்கொடுத்தால் 33 நிலக்கரி கப்பல்களையும் உரிய நேரத்துக்கு பெற்றுக்கொடுக்கக் கூடியதாக இருக்கும்.

# பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் புதிய உறுப்பினராக நாணயக்கார தெரிவு

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் புதிய உறுப்பினராக டக்ளஸ் என். நாணயக்கார நியமிக்கப்பட்டுள்ளார்.

மின்துண்டிப்பு மற்றும் மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் மின்சார சபைக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தன.

இந்நிலையில், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக கடமையாற்றிய மொஹான் சமரநாயக்க மற்றும் பீ. கே. யூ.ஏ. விக்கிரமசிங்க ஆகியோர் இருவரும் தமது இராஜினாமா கடிதத்தை கடந்தவாரம் சமர்ப்பித்திருந்தார்கள்.

அந்த ஆணைக்குழுவின் தற்போதைய தலைவர் ஜனக்க ரத்நாயக்க தன்னிச்சையாக செயற்படுவதாக தெரிவித்தே இவர்கள் பதவி விலகியிருந்தார்கள்.

இவர்களின் இராஜினாமாவின் பின்னர் ஆணைக்குழுவில் ஏற்பட்ட பதவி வெற்றிடத்துக்காக, அரச நிர்வாக சேவையின் அதிகாரியான டக்ளஸ் என். நாணயக்கார ஆணைக்குழுவின் புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். நிதி அமைச்சினால் இந்த நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது.

## ஆணைக்குழுவை...

2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட நிதியை விட, மூன்று மடங்கு அதிக செலவு மதிப்பீட்டை பொலிஸ் திணைக்களம் சமர்ப்பித்துள்ளது.

எதிர்வரும் மார்ச் 9ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு சேவைகளை வழங்குவதற்கு தேவையான தொகையாக 2.8 பில்லியன் ரூபா மதிப்பீட்டை பொலிஸ் திணைக்களம் அனுப்பியுள்ளது.

கொடுப்பனவுகள், எரிபொருள் செலவுகள், வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல், தொலைபேசி மற்றும் தகவல் தொடர்பு, எழுதுபொருட்கள் மற்றும் தற்செயலான செலவுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய மதிப்பிடப்பட்ட செலவுகள், கடந்த தேர்தல் செலவை விட ஆறு மடங்கு வரை பெரிய அதிகரிப்பைக் காட்டியுள்ளன என்று தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த அதிகரிப்புகளில் வாகன வாடகை செலவு ரூ.138 மில்லியனில் இருந்து ரூ.745 மில்லியனாக அதிகரித்துள்ளது. எரிபொருள் கட்டண மதிப்பீடுகள் 108 மில்லியனில் இருந்து 675 மில்லியனாக அதிகரித்துள்ளது.

ஆணைக்குழு தனது சொந்த மதிப்பீடுகளைச் செய்துள்ளதாகவும், பொலிஸ் திணைக்களம் அனுப்பிய புள்ளிவிபரங்கள் மிகவும் அதிகமாக மதிப்பிடப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

பொலிஸ் திணைக்களம் பற்றுச்சீட்டுகளை சமர்ப்பித்த பின்னரே பணம் செலுத்துவதாக தேர்தல் ஆணைக்குழு முடிவு செய்துள்ளதாக அவர் கூறினார்.

தமது மதிப்பீடுகள் தற்போதைய விலையை அடிப்படையாகக் கொண்டவை என்று மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார். தேர்தல்கள் தொடர்பான மூன்று மனுக்கள் நிலுவையில் உள்ள நிலையில், உயர் நீதிமன்றத்தில் தேர்தல் ஆணைக்குழு இந்த விடயத்தை எடுத்துக் கொள்ளும்.

தேர்தலுக்கான திறைசேரி நிதியை விடுவிப்பதில் ஏற்பட்ட தாமதம் குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும் தேர்தல் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

தேர்தலுக்குத் தயாராவதற்குத் தேவையான ரூ.100 மில்லியனில் இருந்து ரூ. 35 மில்லியனை மட்டுமே தேர்தல் ஆணைக்குழு பெற்றுள்ளது. தேர்தலுக்குத் தேவையான தொகையை தாங்கள் மதிப்பிட்டுள்ளதாகவும், ஆனால் உரிய நேரத்தில் நிதி கிடைக்காததால் கவலைப்படுவதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

மதிப்பீடுகளின்படி பெப்ரவரி மாத இறுதிக்குள் ரூ. 800 மில்லியன் தேவைப்படும். மார்ச் இறுதிக்குள் ரூ.1,600 மில்லியன், ஏப்ரல் இறுதிக்குள் ரூ.1,400 மில்லியன், மே இறுதிக்குள் ரூ.600 மில்லியன், ஜூன் மாத இறுதிக்குள் ரூ.120 மில்லியன் மற்றும் ஜூலை இறுதிக்குள் ரூ.80 மில்லியன் தேவைப்படும்.

நிதிச் சிக்கலைத் தவிர, ஆணைக்குழு மற்றும் வேட்பாளர்களுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்க மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சிடமிருந்து தேர்தல் ஆணைக்குழு திருப்திகரமான பதிலைப் பெறவில்லை.

## 75ஆவது சுதந்திர...

பந்துல குணவர்தன இந்திய அரசாங்கத்திடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, 75 ஆவது தேசிய சுதந்திர தினக் கொண்டாட்டத்துடன் இணைந்ததாக, இந்த பஸ்களை வழங்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதன் முதல் தொகுதியாக 75 பஸ்கள் அண்மையில் இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

மேலும் 40 பஸ்களின் பதிவு தற்போது நடைபெற்று வருகிறது.

இதன்படி, இலங்கைக்கு இதுவரை 165 பஸ்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், 500 பஸ்கள் வழங்கும் திட்டம் 2023 மார்ச் மாத இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

கிராமிய மக்களின் போக்குவரத்துத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இந்தப் பஸ்கள் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து டிப்போக்கள் ஊடாகவும் பயன்பாட்டுக்கு விடுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, பாராளுமன்ற உறுப்பினர்களான ராதிகா விக்ரமசிங்க, முதிதா பிரஷாந்தி மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் தலைவர், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## வங்குரோத்து அரசில்...

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் தெரியவரும். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிறைவடைந்து மூன்று அல்லது நான்கு மாதங்களாகும்போது நிச்சயமாக பாராளுமன்றத் தேர்தலும் இடம்பெறுமென்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டி பிரதேசத்தில் நேற்று (05) இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தேசிய கீதத்தை தமிழ் மொழியிலும் சிங்கள மொழியிலும் இசைக்கும் முறையை நாங்களே ஆரம்பித்து வைத்தோம். 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வில் இரு மொழிகளிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. கோட்டபாய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமே அதற்கு தடை விதித்தது. அதுமாத்திரமல்ல, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை சிறையிலடைத்தார்கள். இவ்வாறு சிறுபான்மை மக்களுக்கு அநீதியை இழைத்து நாட்டிலிருந்த சமத்துவத்தை அழித்துவிட்டார்கள். அது மாத்திரமல்லாமல் நாட்டை வங்குரோத்து நிலைமைக்கும் உள்ளாக்கியிருக்கிறார்கள்.

7900 மில்லியன் அமெரிக்க டொலர்களுடனேயே ஆட்சிப் பொறுப்பை இந்த அரசாங்கத்துக்கு கையளித்தோம். அதனை முகாமைத்துவம் செய்ய தெரியாமல் இருப்பை பூச்சியமாக்கிவிட்டார்கள். இன்று நாட்டில் ரூபாக்களும் இல்லை. டொலர்களும் இல்லை. இதற்கும் மேல் சீரழிப்பதற்கு எதுவும் இல்லை. அத்தியாவசியப் பொருட்கள், மருந்துகள், சுதந்திரம் என சகலதும் இல்லாமலாக்கப்பட்டுள்ளன.

சுதந்திர அமைதி சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டவர்களின் மீது பாதுகாப்புப் படையினர் தாக்குதல் புரிகிறார்கள். நாளுக்கு நாள் அதிகரித்துவரும் பொருளாதார நெருக்கடியினை இந்த அரசாங்கத்தினால் பொறுத்துக்கொள்ள முடியாது என்பதால், மக்கள் மீது இவர்களின் பிரயோகிக்கும் அடக்குமுறையும் அதிகரிக்கும்.

இந்த அரசாங்கத்துக்கொரு பதிலளிப்பதற்கும் மக்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்காகவுமே உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு கோரினோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இருந்தபோதும், மக்கள் பலம் இல்லை என்பதை அறிந்ததாலே தேர்தலை காலந்தாழ்த்துவதற்கே அரசாங்கம் தொடர்ந்து முயற்சித்து வருகிறது. கண்டி மாவட்டத்திலுள்ள சகல பிரதேச சபைகளையும் ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றும்.

இது வங்குரோத்து அரசாங்கமாகும். வங்குரோத்து அடைந்தவர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் முழுமையாக பயணம் செய்ய முடியாது என்பதை அவருக்கே அறிவித்திருக்கிறேன். எனவே, இந்த தேர்தல் நிறைவடைந்தவுடனேயே அரசாங்கத்தில் பலம் குன்றிவிடும். எனவே, மூன்று அல்லது நான்கு மாதங்களில் நிச்சயமாக பாராளுமன்றத் தேர்தல் இடம்பெறும் என்பதை உறுதியாக நம்புகிறேன் என்றார்.

## சித்தி கொடுமைப்படுத்துவதை...

முறைப்பாடளித்துள்ள சம்பவம் ஹொரவப்பொத்தானை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சிறுமியின் தாய் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் உயிரிழந்த நிலையில் தந்தை, கணவனை இழந்த ஒரு குழந்தையின் தாயான பெண்ணை மறுமணம் செய்துகொண்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த பெண் மேற்படி சிறுமியை திட்டி சித்திரவதைக்குட்படுத்தியுள்ளார். இதனை தாங்கிக் கொள்ள முடியாத சிறுமி ஹொரவப்பொத்தானை பொலிஸ் நிலையத்தை நாடியுள்ளார்.

பொலிஸ் நிலையத்தை நாடிய சிறுமி, அழுதுகொண்டே தனது சித்தி அவரது மகளை மிகவும் அன்பாக பார்த்துகொள்வதுடன் தன்னை திட்டி துன்புறுத்துவதாகவும் சித்தியின் கொடுமை தாங்கிக் கொள்ள முடியாததாலேயே தான் பொலிஸ்நிலையத்தை நாடியதாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

சிறுமியின் வீட்டிலிருந்து 4 கிலோமீற்றருக்கும் தொலைவிலேயே பொலிஸ் நிலையம் உள்ளதாக தெரிவித்த பொலிஸார், குறித்த சிறுமி நடைபயணமாகவே பொலிஸ்நிலையத்துக்கு வந்து முறைப்பாடளித்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

சிறுமியின் முறைப்பாட்டையடுத்து 41 வயதான அவரது சித்தியை பொலிஸார் நேற்று (05) கைது செய்துள்ளதுடன் அவர்மீது சட்டநடவடிக்கை எடுக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் ஹொரவப்பொத்தானை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நவீன் இந்திரஜித் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## லிட்ரோ எரிவாயு...

5 கிலோ கிராம் நிறையுடைய சமையல் எரிவாயு 134 ரூபாவாலும், 2.3 கிலோ கிராம் நிறையுடைய சமையல் எரிவாயு 61 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்தார்.

எனவே, 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் புதிய விலையாக 4,743 ரூபாவும், 5 கிலோ கிராம் சமையல் எரிவாயுவின் புதிய விலையாக 1,904 ரூபாவும், 2.3 கிலோ கிராம் சமையல் எரிவாயுவின் புதிய விலை 883 ரூபாவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் விளக்கமளிக்கும் வகையில் நேற்று (05) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில், விலை அதிகரிப்பு தொடர்பான விபரம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது.

இந்த விடயம் குறித்து முதித்த பீரிஸ் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

உலக சந்தையில் எரிவாயுவின் விலையானது இந்த மாதத்தில் 200 டொலர்களாக அதிகரித்துள்ளது. உலக சந்தையில் கடந்த ஒக்டோபர் மாதத்திலிருந்து 560 ரூபாவாக இருந்த ஒரு மெட்ரிக் தொன் எரிவாயுவின் விலை, இன்றளவில் 790 ரூபாவாக அதிகரித்திருக்கிறது. இப்போது மாத்திரமல்ல கடந்த வருடங்களிலும் விலை சூத்திரத்துக்கமைய எரிவாயுவுக்கான விலை அதிகரிக்கப்பட்டிருந்தது. ஆனாலும், நாட்டில் தற்போதுள்ள நிலைமைகளுக்கமைய விலை அதிகரிக்கப்பட வேண்டுமெனில் 950 ரூபா வரையில் அதிகரித்திருக்க வேண்டும்.

இருந்தபோதும் ஆரம்பட்ட அதிகரிப்பை 334 ரூபாவால் அதிகரித்துள்ளோம். இந்த விலை அதிகரிப்பை அறிந்தும் ஆய்வுகளை மேற்கொண்டு ஜனவரி மாதத்தில் மேலதிகமாக 7 ஆயிரம் தொன் எரிவாயுவை இறக்குமதி செய்திருந்தோம். இவ்வாறு இறக்குமதி செய்ததால் 500 மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டிக்கொண்டிருந்தோம். அந்த இலாபத்தை மக்களுக்கும் வழங்க வேண்டும் என்பதற்காகவே, 950 ரூபாவால் அதிகரித்திருக்க வேண்டிய எரிவாயு விலையை 334 ரூபாவால் மாத்திரம் அதிகரித்துள்ளோம்.

சிங்கள தமிழ் புத்தாண்டு காலப்பகுதியில் தேவையான எரிவாயு கிடைக்கும் என்பதுடன் மீண்டும் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது. மீண்டும் மார்ச் மாதத்தின் ஆரம்பத்தில் எரிவாயுவுக்கான விலை திருத்தப்படும். உலக சந்தையிலுள்ள நிலைமைகளின் அடிப்படையில் பெப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் போன்ற மாதங்களில் எரிவாயுவுக்கான விலை மேலும் அதிகரிக்கலாம் என்று எங்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. தெளிவாக குறிப்பிட முடியாது. ஓரளவு விலை அதிகரிக்கும் நிலைமையே இருக்கிறது.

இருந்தபோதும் ஏப்ரல் மாதத்தின் பின்னர் மீண்டும் விலையில் வீழ்ச்சி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அவ்வாறு ஏப்ரல் மாதத்தில் வீழ்ச்சி ஏற்படுமாக இருந்தால் அதற்கான நிவாரணத்தை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்திருக்கிறோம். இந்த அதிகரிப்பும் மக்களுக்கு சுமையாக இருக்கும் என்பதை நாங்கள் அறிவோம். இருந்தபோதும் நிறுவனத்தின் முகாமைத்துவத்தை முறையாக முன்னெடுத்து சர்வதேச சந்தைக்கு ஈடுகொடுக்கும் வகையிலேயே இந்த விலை அதிகரிப்பை மேற்கொண்டுள்ளோம்.

மார்ச் மாதத்தின் இரண்டாம் வாரமாகும்போது 10 ஆயிரம் வரையிலான புதிய சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்கவும் எதிர்பார்த்திருக்கிறோம். வீடுகளில் எரிவாயு சிலிண்டர் வைத்திருப்பவர்களுக்கு மாறாக ஒரு சிலிண்டர் கூட இல்லாதவர்களுக்கு சிலிண்டர்களை பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்திருக்கிறோம். அதற்குக் காரணம் ஒருவர் ஒன்று அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சிலிண்டர்களை பயன்படுத்துவதாக தகவல்கள் கிடைத்திருக்கின்றன என்றார்.

## வரிகளில் திருத்தம்!...

இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை, அதிகளவான வரி விதிப்பு காரணமாக மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் உட்பட பெருமளவிலான தொழில் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தயாராகி வருவதாக தேசிய புலனாய்வுப் பிரிவினர் அரசாங்கத்திற்கு அறிக்கை ஒன்றின் ஊடாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

இன்று கூடும் அமைச்சரவை கூட்டத்தின்போது இதுபற்றி விரிவாக பேசப்படவுள்ளதாக மூத்த அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

## இலங்கைக்கு எதிராக...

போராட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் இந்த போராட்டங்களுக்கு வலுச் சேர்க்கும் முகமாக இலண்டனில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

13ஆவது சீர்திருத்தம் என்பது ஈழத்தில் உள்ள எமது உறவுகளுக்கான ஒரு தீர்வு அல்ல. இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை நடத்தப்பட்டு நீதி வழங்க வேண்டும்.

ஒற்றையாட்சிக்குள் 13ஆவது சீர்திருத்தத்தை அமுல்படுத்துவதன் மூலம் எமது உரிமைகளை வழங்க முடியும் என இந்தியாவோ சர்வதேசமோ நினைக்க கூடாது என்றனர்.

போராட்டக்காரர்கள் பதாகைகள், புலிக்கொடிகள் போன்றவற்றை ஏந்தி கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். நாடு கடந்த தமிழீழ அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப் போராட்டத்தில் 20இற்கும் மேற்பட்ட புலம்பெயர் ஈழத்தமிழர்கள் கலந்துகொண்டனர்.

## சஜித் அணியில்...

அக்கட்சிக்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட சந்திம வீரக்கொடி எம்.பி., நாட்டில் பட்டினியை நீக்கும் செயற்பாட்டுக்கு உழைக்கும் சஜித் பிரேமதாசவுடன் இணைந்துகொள்வதாக அறிவித்தார்.

## முஷாரப் காலமானார்...

முஷாரப், கடந்த 2001ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டுவரை பாகிஸ்தானின் ஜனாதிபதியாக பதவி வகித்தார். 2008ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் தோல்வியடைந்து நாட்டைவிட்டு வெளியேறினார். அதன் பின்னர் 2013ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட முயன்றபோது அதற்கு தடை விதிக்கப்பட்டது. அவர் மீது தேசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டது.

அதன் பின்னர் அவர் மேன்முறையீடு செய்து டுபாயில் தங்கியிருந்து நோய்களுக்காக சிகிச்சைப்பெற்று வந்த நிலையிலேயே காலமானார்.

## இந்திய அரசாங்கத்தின்...

தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அத்துடன், சவாலை எதிர்கொள்ள வேண்டுமெனில் களத்தில் இறங்கியாக வேண்டும். நெருக்கடியை கண்டு பின்வாங்கி நிற்பது ஏற்புடையதல்ல. அதனால்தான் நெருக்கடியான சூழ்நிலையில் அமைச்சு பதவியை ஏற்றேன். மாறாக பதவி ஆசையில் அல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் ஊவா மாகாணத்திலுள்ள சபைகளுக்கு போட்டியிடும் வேட்பாளர்களுடனான கலந்துரையாடலும், தேர்தல் பிரசார ஆரம்பக்கூட்டமும் பண்டாரவளை, மாநகரசபை மண்டபத்தில் ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று (05) நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களிடம் குறைநிறைகளையும், மாற்றுக் கருத்துகளையும் கேட்டறிந்த அமைச்சர், உடனடி தீர்வுகளையும், ஆலோசனைகளையும் வழங்கினார். அத்துடன், நாகரீகமான முறையில் தேர்தல் பிரசாரத்தை முன்னெடுக்குமாறும் பணிப்புரை விடுத்தார்.

இ.தொ.காவின் உப தலைவரும், ஹல்துமுல்ல பிரதேச சபையின் தவிசாளருமான அசோக்குமார் நிகழ்வுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார். இ.தொ.காவின் உப தலைவரும், சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளருமான பாரத் அருள்சாமி, ஊவா மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சிவலிங்கம், வேட்பாளர்கள், கட்சி செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோரும் நிகழ்வில் பங்கேற்றனர்.

ஊவா மாகாணத்துக்கான முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தை வெற்றிகரமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஜீவன் தொண்டமான் மேலும் கூறியவை வருமாறு,

“மக்களுக்கு சேவை செய்யவே நான் அரசியலுக்கு வந்துள்ளேன். எனவே, மாலை, பொன்னாடைகள் வேண்டாமென ஏற்கனவே கூறியுள்ளேன். ஆகவே எனக்காக கொண்டுவந்த மாலைகளை அப்படியே கோவிலுக்கு கொண்டு சென்று சாமிக்கு அணிவித்து ஆசிபெறுங்கள். எமது தலைவர் ஆறுமுகன் தொண்டமானுடன் தோளோடு தோள் நின்று பதுளையில் சேவல் கொடியை ஏற்றிய அனைத்து சொந்தங்களுக்கும் நன்றி.

இன்றைய கூட்டத்துக்கு இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான், தவிசாளர் ரமேஷ் ஆகியோரும் வரவிருந்தனர். தேர்தல் பிரசாரத்தால் அவர்களால் வரமுடியாமல் போனது. நாம் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள். ஒரே குடும்பம். ஆகவே, ஒன்றாக முன்னோக்கி பயணிப்போம்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் அவசியமா? அதனால் மாற்றம் ஏதும் ஏற்படுமா? தேர்தல் முடிவுகள் வந்த பிறகு ஜனாதிபதியாக ரணிலே இருப்பார். பிரதமராக தினேஷ் குணவர்தனவே செயற்படுவார்.


அமைச்சரவையிலும் மாற்றம் வராது. நான் தேர்தலுக்கு எதிரானவன் அல்லன். தேர்தலொன்று நடைபெறுமானால் அது ஜனாதிபதித் தேர்தலாகவே இருக்க வேண்டும்.

கோட்டபாய ராஜபக்ஷ பதவி விலகிய பின்னர், சஜித், ரணில் என இருவருக்கும் பதவியேற்க அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் சவாலை ஏற்றால் அரசியல் எதிர்காலம் இல்லாது போய்விடும் என்பது இருவருக்கும் தெரியும். சஜித் பின்வாங்கினார். ரணில் சவாலை ஏற்றார். நாட்டில் 6 மாதங்களுக்கு முன்னர் இருந்த நிலைமை தற்போது இல்லை. அதேபோல ஓரே இரவில் மாற்றத்தை ஏற்படுத்திவிடவும் முடியாது. உடைப்பது இலகு. கட்டுவதுதான் கஷ்டம். இந்தியா உட்பட பல நாடுகள் உதவி வருகின்றன. சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் கிடைப்பதற்கு நிதி உத்தரவாதம்கூட வழங்கப்பட்டுள்ளது.

நெருக்கடியான கட்டங்களில் பதுளை மாவட்டமும் காங்கிரஸை தோளில் சுமந்துள்ளது. அந்த மண்ணை மறக்கமாட்டோம். தேர்தல் பிரசாரத்தை, எவரையும் கொச்சைப்படுத்தும் வகையில் முன்னெடுக்காமல், நாகரீகமாக முன்னெடுங்கள்” - என்றார்.

# வெளிநாட்டு அமைச்சர்களுடன் ஜனாதிபதி ரணில் சந்திப்பு

## 13ஆவது திருத்த அமுலாக்கம் தொடர்பில் இந்தியா கரிசனை




இலங்கையின் 75ஆவது சுதந்திரக் கொண்டாட்டத்தில் பங்கேற்பதற்காக வருகை தந்த இந்தியா, பூட்டான், பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம் மற்றும் மாலை தீவு ஆகிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று முன்தினம் (04) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்திய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வி.வி.முரளீதரன் முதலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்ததுடன், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது மற்றும் இன நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடினார். இலங்கை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு இந்திய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் பாராட்டுத் தெரிவித்தார்.

சுதந்திர தின விழாவில் பங்கேற்பதற்காக இலங்கை வந்த பூட்டானின் கல்வி மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் ஜெய் பிர் ராய் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடினார். இங்கு கல்வித் துறையில் அதிக கவனம் செலுத்தப்பட்டதுடன், சுற்றுலா மற்றும் கலாசாரத் துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அதன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஏ.கே.அப்துல்லா மொமன் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கைக்கும் பங்களாதேஷுக்கும் இடையிலான பொருளாதார, வர்த்தக மற்றும் கலாசார உறவுகளை மேலும் மேம்படுத்துவது மற்றும் நட்பு நாடுகளாக ஒத்துழைப்போடு முன்னோக்கிச் செல்வது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இலங்கை, பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்ட போது பங்களாதேஷ் அரசாங்கம் வழங்கிய ஆதரவிற்கு நன்றி தெரிவிக்கவும் ஜனாதிபதி இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

பாகிஸ்தான் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் ஹினா ரப்பானி காரும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் ஜனாதிபதியின் முயற்சிகளை பாராட்டிய பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்தார். இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான வர்த்தகம், சுற்றுலா மற்றும் மத உறவுகளை விரிவுபடுத்துவது தொடர்பில் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அதன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் நேபாள வெளிவிவகார அமைச்சர் கலாநிதி பிமலா ராய் பௌத்யாவிற்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான ஜனாதிபதியின் திட்டத்தைப் பாராட்டிய நேபாள வெளிவிவகார அமைச்சர், இரு நாடுகளுக்கும் இடையிலான சுற்றுலாத் துறையை மேலும் வலுப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் அப்துல்லா ஷஹிட்டும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

# இலங்கை - இந்திய ஒப்பந்தம் சட்ட ரீதியானதல்ல

## ஜனாதிபதி ரணில் இதனை மறுக்க முடியாது என்று வலியுறுத்துகிறார் அத்துரலியே தேரர்



இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஜனநாயக ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டதல்ல. இந்தியாவால் பலவந்தமாக எமது நாட்டின் மீது திணிக்கப்பட்டவொன்றாகும். இதனை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் மறுக்க முடியாது என்று எங்கள் மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தன தேரர் தெரிவித்தார்.

விஜய தரணி தேசிய சபையினால் நேற்று (05) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஜனநாயக ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் என்று ஜனாதிபதி கூறுகிறார். ஆனால், இது சட்ட ரீதியான ஒப்பந்தம் இல்லை. 1977ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி ஆறில் ஐந்து பங்கு ஆசனங்களை பாராளுமன்றத்தில் பெற்றுக்கொண்டார்கள். அதன்பின்னர் அரசியலமைப்பை மாற்றி 1978ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஜே.ஆர்.ஜெயவர்தன நியமிக்கப்பட்டார். ஆனால், அவர் மக்களின் ஆதரவில் ஜனாதிபதியாகவில்லை. பாராளுமன்ற பலத்தினூடாகவே ஜனாதிபதியானார்.

அதன் பின்னர், அந்த அரசியலமைப்பின் பிரகாரம் 1982ஆம் ஆண்டு தேர்தலொன்றை நடத்தியிருக்க வேண்டும். ஆனால், அந்த தேர்தலை நடத்தாமல் காலந்தாழ்த்தினார்கள். அந்த சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பு சட்டபூர்வமானது என்று குறிப்பிட்டிருந்தாலும் அது ஜனநாயகத்துக்கு முரணானதாகும். 1977ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது இருந்த அரசியலமைப்பு 1978ஆம் ஆண்டு இருக்கவில்லை. புதிய அரசியலமைப்பின் பிரகாரம் தேர்தலொன்றை நடத்தியிருக்க வேண்டும். இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையில் நிறைவேற்றப்பட்டது. இடம்பெறவிருந்த பொதுத் தேர்தலை நடத்தாமல் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை ஒருபோதும் பெற்றுக்கொள்ள முடியாது. ஜனநாயகத்துக்கு முரணாகவே இந்த பெரும்பான்மையை அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

ஐந்து பயங்கரவாத அமைப்புகளுக்கு இந்தியா ஆதரவளித்தது அவர்களுக்கு ஆயுத பலத்தை வழங்கியது என்பதை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். அதனை, நிராகரிக்க முடியாது. இலங்கை -இந்திய ஒப்பந்தம் ஜனநாயக ரீதியாக கொண்டுவரப்பட்டது என்றும் கூற முடியாது. இது இந்தியாவினால் பலவந்தமாக எமது நாட்டின் மீது திணிக்கப்பட்டவொன்றாகும். இதற்காக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அப்போதிருந்த அமைச்சரவை மற்றும் ஜே.ஆர். ஜயவர்தன ஆகியோரை இந்தியா பயன்படுத்திக்கொண்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட எம்.சி.சி. ஒப்பந்தத்தை மத்திய அரசாங்கம் நடைமுறைப்படுத்த தவறியதால் காணி உரிமைகளை வழங்குமாறு கோரப்படுகின்றது. வடக்கு மாகாண சபை இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பை பேணிவருகிறது. எனவே, இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஜனநாயகத்துக்கு முரணானது என்பதை நிராகரிக்க முடியும் என்றால் ஜனாதிபதி அதனை நிராகரிக்க வேண்டும்.

வடக்கில் மாத்திரம் தமிழ் மக்கள் வாழவில்லை. இலங்கை - இந்திய ஒப்பந்தத்திலுள்ள ஒருசில ஏற்பாடுகள் தமிழ் மக்களுக்கு நட்டமானவையாகும். வடக்கு கிழக்கு என்பது தமிழ் மக்களின் பூர்வீகப் பிரதேசங்கள் என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், வடக்கு கிழக்கை தவிர்ந்த ஏனைய பிரதேசங்கள் சிங்கள மக்களின் பூர்வீகம் என்று யாரும் ஒப்புக்கொண்டதில்லை.

# அநுராதபுரம் போதிக்குள் வெடிமருந்துடன் உள்நுழைந்தவருக்கு 17 வரை விளக்கமறியல்

(அநுராதபுரம் செய்தியாளர்)

அநுராதபுரம் புனித ஜய ஸ்ரீ மஹா போதிக்குள் வெடிமருந்து மற்றும் சேவா நூல்களுடன் உட்பிரவேசித்த குற்றச்சாட்டு தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 17ஆம் திகதிவரைக்கும் விளக்கமறியலில் வைக்கும்படி அநுராதபுரம் நீதிமன்ற நீதவான் உத்தர விட்டுள்ளார்.

நீதிமன்றத்தில் பெறப்பட்ட 72 மணி நேர தடுப்புக்காவல் அனுமதி உத்தரவின்பேரில் தடுத்துவைத்து விசாரணை செய்ததன் பின்னர் நேற்று (05) மீண்டும் சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோதே நீதவான் இவ்வுத்தரவை பிறப்பித்துள்ளார். இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளவர் 54 வயதுடைய காலி, பிட்டிகல, தல்கஸ் வெவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பது தெரியவந்துள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

கடந்த 02ஆம் திகதி வியாழக்கிழமை காலை அநுராதபுரம் ஜய ஸ்ரீ மஹா போதியின் வடக்கு நுழைவாயில் ஊடாக சந்தேகநபர் 32 கிராமுக்கும் அதிகமான வெடிமருந்து மற்றும் சேவா நூல்களுடன் பிரவேசிக்க முற்பட்டபோது கடமையில் இருந்த பொலிஸார் சந்தேக நபரை கைதுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர்.

# வனப் பாதுகாப்பு அதிகாரியைத் தாக்கிய உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் கைது

வல்லப்பட்டை வெட்டும் கும்பலைத் தேட வந்த இரண்டு வன அலுவலர்களைத் தாக்கிய, உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரும் அவரது நண்பரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளானதாக கூறப்படும் வன பாதுகாப்பு அதிகாரி மாதம்பே வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாக வனப் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வனப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவரும் வந்த மோட்டார் சைக்கிளையும் சந்தேக நபர்கள் தாக்கி சேதப்படுத்தியதாக வன அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அரச பாதுகாப்பு வனப்பகுதியில் வல்லபட்டை மரங்களை வெட்டும் பணியில் ஈடுபட்டிருந்த சிலரை வனப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கைதுசெய்யச் சென்றபோதே குறித்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

# பாராளுமன்ற வீதிகளில் வாகனங்கள் 40 கி.மீ.க்கு குறைவான வேகத்தில் செல்லுமாறு அறிவுறுத்து

பாராளுமன்றத்திற்குள் உள்ள வீதிகளில் பஸ்கள் உள்ளிட்ட வாகனங்கள் மணிக்கு 40 கிலோ மீற்றருக்கும் குறைவான வேகத்தில் பராமரிக்கப்பட வேண்டுமென பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ அறிவுறுத்தியுள்ளார்.

அதிவேகமாக வாகனங்களை செலுத்தும்போது, தியவன்னா ஈரநிலப் பகுதியில் வாழும் பறவைகள் மற்றும் பாராளுமன்றத்திற்கு வருகை தரும் பாடசாலை மாணவர்களும் விபத்துகளை சந்திக்க நேரிடும் என அவர் தெரிவித்தார்.

மேலும், பாராளுமன்றத்திற்குள் உள்ள வீதிகளில் சில வாகனங்கள் அதிவேகமாக பயணிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கெப் ரக வாகனத்தில் மோதி மோட்டார் சைக்கிள் விபத்து

## ஒருவர் உயிரிழப்பு

பியந்தலை - ஜாலியகொட, கெஸ்பேவ பிரதேசத்தில் நேற்று (05) சிவில் பொறியியலாளர் ஓட்டிச்சென்ற கெப் வாகனமொன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சம்பவம் அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கெமராவில் பதிவாகியுள்ளது.

காலியம்மஹர பிரதேசத்தில் வசித்து வந்த 56 வயதுடைய நபரே குறித்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

சிவில் பொறியியலாளர் ஓட்டிச்சென்ற கெப் வாகனம் கொழும்பிலிருந்து கெஸ்பேவ நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது, பிலியந்தலையிலிருந்து வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் இவ்விபத்து சம்பவித்துள்ளது.

உயிரிழந்த வர்த்தகரின் தலையில் பலத்த காயங்கள் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். பொறியியலாளர் கவனக்குறைவாக வாகனம் செலுத்தியமையே விபத்துக்குக் காரணமென பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகத்திற்குரிய சிவில் பொறியியலாளர் கைதுசெய்யப்பட்டதுடன், கெஸ்பேவ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பிலியந்தலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ள ரூ.100 கோடி பெறுமதியான வாகனங்கள்



கொழும்பு துறைமுகத்தின் களஞ்சியசாலையில் உள்ள 400 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான பொருட்கள் அடங்கிய 89 கொள்கலன்களை சுங்கத்துறை பொறுப்பேற்றுள்ளதுடன், ஒரு வாரத்திற்குள் அவற்றை அகற்றுமாறு துறைமுக அதிகாரசபைக்கு உத்தரவிட்டதாக துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த பொருட்களில் உள்ள சொகுசு வாகனங்களின் பெறுமதி மாத்திரம் 100 கோடி ரூபாவிற்கும் அதிகம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பல வருடங்களாக சுங்கத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் கொள்கலன்கள் தடுத்து வைக்கப்படுவதனால் அரசாங்கத்திற்கு பாரிய தொகை நட்டம் ஏற்பட்டுள்ள நிலையில், காலாவதியான சுங்கச் சட்டம் இன்றைய நிலைமைக்கு ஏற்றவாறு உடனடியாக திருத்தம் செய்யப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# சிற்றுண்டிகளின் விலை அதிகரிப்பு குறித்து இன்று இறுதித் தீர்மானம்



அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கம் தமது உற்பத்திகளினது விலை திருத்தம் தொடர்பான இறுதித் தீர்மானம் இன்று (06) எடுக்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளது.

சமையல் எரிவாயு விலை அதிகரித்தமையினால் தமது உற்பத்திகளின் விலையை அதிகரிப்பதற்கு நேர்ந்துள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

# இராணுவத்தின் 208 அதிகாரிகள் மற்றும் 7,790 படையினருக்கு பதவி உயர்வு

நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கை இராணுவத்தின் 208 அதிகாரிகள் மற்றும் இராணுவத்தின் 7,790 படையினர் மற்றும் தன்னார்வ படையினருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் சிபாரிசு மற்றும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே ஆகியோரின் பரிந்துரையின் அடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி, மேஜர் ஜெனரல் தரத்திற்கு 8 பிரிகேடியர்களும், பிரிகேடியர் தரத்திற்கு 17 கேர்ணல்களும், கேர்ணல் பதவிக்கு 10 லெப்டினன்ட் கேர்ணல்களும், லெப்டினன்ட் கேர்ணல் தரத்திற்கு 10 மேஜர்களும், மேஜர் தரவரிசையில் 78 கெப்டன்களும், 12 கெப்டன் பதவிக்கு, 9 லெப்டினன்ட்கள் (QM) கெப்டன் (QM) மற்றும் 64 இரண்டாம் லெப்டினன்ட் பதவிக்கு லெப்டினன்ட் (வழக்கமான படை மற்றும் தன்னார்வப் படை) அதிகாரிகள் பிரிவில் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

இதர பதவிகள் பிரிவில், வாரண்ட் அதிகாரி-I பதவிக்கு மொத்தம் 181 வாரண்ட் அதிகாரிகள்-II, வாரண்ட் அதிகாரி-II பதவிக்கு 473 ஸ்டாஃப் சார்ஜென்ட்கள், ஸ்டாஃப் சார்ஜென்ட் தரத்திற்கு 679 சார்ஜென்ட்கள், 1697 கார்ப்ரல்கள் தரவரிசைக்கு சார்ஜென்ட், 1740 லான்ஸ் கார்போரல்கள் கார்போரல் மற்றும் 3020 தனியார்கள் லான்ஸ் கார்போரல் (வழக்கமான படை, தன்னார்வப் படை மற்றும் கூடுதல் ரெஜிமென்ட் வேலை வாய்ப்பு அடிப்படையில்) பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

அதன்டி மூத்த பிரிகேடியர்களில் பிரிகேடியர் எல்.எஸ்.பாலச்சனத்ரா, பிரிகேடியர் டபிள்யூ. சந்திரசிறி, பிரிகேடியர் டி.எம்.பி.பி. தசநாயக்க, பிரிகேடியர் ஏ.சி.ஏ.டி சொய்சா, பிரிகேடியர் ஆர்.கே. என்.சி., பிரிகேடியர் பி.ஆர். கே.என்.சி. ஆகியோர் மேஜர் ஜெனரல் தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளனர்.

# ஒபெக்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவன பணிப்பாளர் ஒனேஷ் சுபசிங்க ஜகார்த்தாவில் சடலமாக மீட்பு

இலங்கையின் ஒபெக்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், கோடீஸ்வர தொழிலதிபருமான ஒனேஷ் சுபசிங்க (45) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பொன்றிலிருந்து நேற்று (05) அவரது சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

தொழிலதிபர் மற்றும் அவரது குடும்பத்தினர் ஜகார்த்தாவுக்கு சுற்றுலா சென்றிருந்தபோதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்துக்கான காரணம் தெரியவராத நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஜகார்த்தா பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் தை மாதம் 23ஆம் நாள் திங்கட்கிழமை**

**மேஷம்** — நண்பர்கள் மூலம் நீங்கள் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வீடு, வாகன இலாபங்கள் அமையும்.

**ரிஷபம்** — சமயோசிதமான புத்தியால் அனைத்தையும் சாதிப்பீர்கள், அவசிய செலவுகளை செய்வீர்கள்.

**மிதுனம்** — பேச்சினால் பிழைப்பவர்களுக்கு புகழ், கௌரவம் உண்டு. அரச வகையில் நன்மைகள் உண்டு.

**கடகம்** — போட்டிப் பந்தயங்களில் வெற்றி வாகை சூடுவீர்கள். திடீர் தன வரவு ஏற்படும்.

**சிம்மம்** — வீண் டென்ஷனால் குழம்பித் தவிப்பீர்கள். உடல் நலத்தை பார்த்துக் கொள்ளுங்கள்.

**கன்னி** — தர்ம சிந்தனையுடன் செயலாற்றுவீர்கள். நினைத்தது நடக்கும், இலாபம் உண்டு.

**துலாம்** — தொழில்துறையில் சாதனை படைக்கும் நாள். முக்கியமான சில முடிவுகளை எடுப்பீர்கள்.

**விருச்சகம்** — சுப செய்தியால் ஆனந்தமடைவீர்கள். எதிர்காலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தக்கூடிய நாள்.

**தனுசு** — மௌனம் காத்து, ஆலய வழிபாடு செய்வதால் மன நிம்மதி உண்டு, தூரப்பயணங்கள் வேண்டாம்.

**மகரம்** — அவசர முடிவுகள் எதையும் எடுக்காமல் இருப்பது நல்லது. பெண்களால் உதவிகள் உண்டு.

**கும்பம்** — கோபங்களை அடக்கிக் கொள்வதால் வீண் பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்ளலாம். செலவுகள் அதிகம்.

**மீனம்** — தெளிந்த மனதுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். அதிர்ஷ்ட வாய்ப்புகள் நிறைந்த நன்நாள்.

| | |
|---|---|
| திதி | : பிரதமை பி.ப.2.19 வரை பின் துவிதியை |
| நட்சத்திரம் | : ஆயில்யம் பி.ப.3.03 வரை பின் மகம் |
| யோகம் | : சித்த யோகம் (சுப காரியம் நன்மை) |
| வார சூலை | : வடமேற்குத் திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| நல்ல நேரம் | : பி.ப. 12.33 – 1.33 மணி வரை |
| ராகு காலம் | : 8.03 – 9.33 மணி வரை |
| எமகண்டம் | : 11.03 – 12.33 மணி வரை |
| குளிகை | : 2.03 – 3.33 மணி வரை |
| சந்திராஷ்டமம் | : தனுசு-மகர ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| தனஅதிர்ஷ்டம் | : பூசம், அனுஷம், உத்திரட்டாதி (பிறந்தவர்களுக்கு) |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, பெப்ரவரி 06ஆம் திகதி, திங்கட்கிழமை

# ஜெசிந்தாவின் இராஜினாமா இலங்கைக்கு சொல்லும் செய்தி

நியூசிலாந்தின் முன்னாள் பிரதமர் ஜெசிந்தா அண்மையில் பதவி விலகிய விடயம் யாரும் எதிர்பார்க்காத ஒன்று. அரசியலில் பதவிகளை எப்படி இன்னுமின்னும் தக்கவைக்கலாம்? எப்படி இன்னுமின்னும் சுகபோகங்களை அனுபவிக்கலாம்? எப்படி மக்களை ஏமாற்றலாம் என்று சராசரி அரசியல்வாதிகள் நினைத்துக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் ஜெசிந்தாவின் இந்த விலகல் ஆச்சரியத்தை தருவதில் புதுமையில்லை.

உலகின் மிகவும் சக்திவாய்ந்த பெண்மணிகளில் ஒருவர் என்றும் சர்வதேச அரசியலின் முற்போக்கு சிந்தனையாளராக அறியப்படுபவருமான ஜெசிந்தா ஆர்டன், தனது பதவி விலகலுக்கு குறிப்பிட்ட முக்கியமான காரணம் குடும்ப வாழ்க்கை. ஆணாதிக்க அரசியலில் பாலின சமத்துவத்துக்கான எடுத்துக்காட்டாக உயர்ந்த முன்னாள் பிரதமர் ஜெசிந்தா, கடந்த ஐந்து ஆண்டுகளில் நிகழ்த்திய சாதனைகளின் பின்னணியில் பார்க்கும்போது அவரது முடிவு பலருக்கும் ஏற்புடையதாக இல்லை.

தனது வயதால் மட்டுமல்ல, உணர்வுகளாலும் செயற்பாடுகளாலும் உலகத் தலைவர்களில் இருந்து வேறுபட்டவராகத் தன்னை அடையாளம் காட்டியவர் நியூசிலாந்தின் முன்னாள் பிரதமர். 42ஆவது வயதில் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து, குடும்ப வாழ்க்கைக்கு செல்ல விரும்பும் ஜெசிந்தா தெரிவிக்கும் விளக்கங்களை ஏற்கவும் முடியவில்லை. மறுக்கவும் முடியவில்லை.

"அரசியல்வாதிகளும் மனிதர்கள்தான். மகள் நீவ், இந்தக் கல்வியாண்டு முதல் பாடசாலையில் சேர வேண்டும். வாழ்க்கைத் துணைவர் கிளார்க் கெய்ஃபோர்டுடனான திருமண உறவை இந்த ஆண்டில் முறைப்படுத்த வேண்டும்" - என்று நிறைந்த விழிகளுடன் தனது பதவி விலகலுக்கான காரணத்தை அவர் தெரிவித்தார். "எப்போதும் அனைவருடனும் அன்புடனும் நேசத்துடனும் பழகியவர் என்று நான் அறியப்பட வேண்டும்" என்றும் பதவியில் இருந்து விலகியபோது அவர் தெரிவித்தமை பலரின் மானசீக வரவேற்பைப் பெற்றது.

கொவிட்-19 நோய்த்தொற்றின்போது முதன்முதலில் பொதுமுடக்கம் அறிவித்த நாடுகளில் நியூசிலாந்தும் ஒன்று. அங்கே கொரோனா நோய்த்தொற்றால் ஏற்பட்ட உயிரிழப்புகள் 2,500க்கும் குறைவு. அப்போது அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்த பிரதமராக இருந்த ஜெசிந்தா உத்தரவிட்டார். வருங்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகளை எதிர்கொள்வதற்கு அதிலிருந்து பாடம் கற்க முடியும் என்பது அவர் அளித்த விளக்கம். உலகமே அதை வியந்து பாராட்டியது.

2017இல் கூட்டணி ஆட்சியில் ஜெசிந்தா பிரதமரானபோது மிகக் குறைந்த வயதில் நியூசிலாந்து பிரதமரானவர் என்கிற பெருமைக்குரியவரானார். 2018 ஜூன் மாதம் மகள் நீவ் பிறந்தபோது, பாகிஸ்தானின் பெனாசீர் பூட்டோவுக்குப் பிறகு பதவியிலிருக்கும்போது தாய்மைப்பேற்றை அடைந்தவர் என்கிற சிறப்பும் அவருக்குக் கிடைத்தது. தனது கைக்குழந்தையுடன் ஐ.நா. சபைக் கூட்டத்தில் அவர் கலந்துகொண்டதும், உரை நிகழ்த்தியதும் வரலாற்றுப் பதிவுகள்.

2019 மார்ச் மாதம் கிறைஸ்ட் சர்ச் மசூதியில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலின்போது பிரதமர் ஜெசிந்தா ஆர்டன், அதை மனிதாபிமான கண்ணோட்டத்துடன் எதிர்கொண்டவிதம் பாராட்டுகளைக் குவித்தது. 2020 ஒக்டோபரில் நடந்த பொதுத்தேர்தலில் அவரது தலைமையில் தொழிலாளர் கட்சி, மிகப் பெரிய வெற்றியை பெற்றது.

ஆனால், அது முதல் அவரது ஆட்சி பல்வேறு சவால்களையும் விமர்சனங்களையும் எதிர்வினைகளையும் சந்திக்கத் தொடங்கியது. பொருளாதார நெருக்கடியும் அதிகரித்து வரும் வன்முறைச் சம்பவங்களும் ஜெசிந்தா ஆர்டன் ஆட்சியின் செல்வாக்கில் சரிவை ஏற்படுத்தின.

கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவிலான விலைவாசி உயர்வும் பணவீக்கமும் நியூஸிலாந்தை கடுமையான நெருக்கடிக்கு உள்ளாக்கியிருக்கின்றது. போதாக்குறைக்கு மத்திய வங்கி தனது வட்டி விகிதத்தை உயர்த்தி வருகிறது. கடந்த மாதம் வெளிவந்த கணிப்புகளில் தொழிலாளர் கட்சியின் மக்கள் செல்வாக்கு குறைந்திருப்பது தெரிகிறது. தொழிலாளர் கட்சி 33% என்றால், எதிர்க்கட்சியான தேசியக் கட்சி 38% அளவில் உயர்ந்திருக்கிறது. தனிப்பட்ட செல்வாக்கில் முதலிடம் பெற்றாலும் கூட, ஜெசிந்தாவுக்குக் கிடைத்த ஆதரவு 29% மட்டுமே. 2017க்குப் பிறகு இந்த அளவு மோசமான செல்வாக்கு சரிவை அவர் சந்தித்ததில்லை.

அடுத்த தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்பதைத் தனது பதவி விலகலின் மூலம் தெரிவித்திருக்கிறார் முன்னாள் பிரதமர் ஜெசிந்தா. கல்வித்துறை அமைச்சராக இருந்த கிறிஸ்டோபர் ஜோன் ஹிப்கின்ஸ் நியூசிலாந்தின் புதிய பிரதமராகப் பதவியேற்றிருக்கிறார்.

ஜனநாயக சோஷலிசவாதி , முற்போக்குவாதி, பெண்ணியவாதி உள்ளிட்ட பல அடையாளங்கள் ஜெசிந்தாவுக்கு உண்டு. கருக் கலைப்பை குற்றவியல் வகுப்பிலிருந்து அகற்றியதும் வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள குழந்தைகளின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தியதும் பருவநிலை மாற்றப் பிரச்சினையில் அவர் எடுத்த நிலைப்பாடும் சர்வதேச அளவில் அவருக்குப் புகழ் தேடித்தந்தன.

அப்படிப்பட்ட தலைவர் நியூசிலாந்து மிகப் பெரிய நெருக்கடியை எதிர்கொள்ளும்போது, தனது தனிப்பட்ட குடும்ப வாழ்க்கைக்காக பொதுவாழ்க்கையில் இருந்து விடைபெறுவது சரியான முன்னுதாரணமா என்கிற கேள்வியை எழுப்பாமல் இருக்க முடியவில்லை. அவரது பதவி விலகலுக்கான காரணம் ஏற்றுக்கொள்ளும்படியானதல்ல.

ஆனாலும், ஜெசிந்தாவின் விலகல் பதவி ஆசை பிடித்து அலையும் அரசியல்வாதிகளுக்கு சம்மட்டியடி என்று சொன்னால் மிகையாகாது. இலங்கையைப் பொறுத்தவரை ஜனாதிபதி, பிரதமர் கதிரைகளை அலங்கரித்த பலர் இன்னும் அரசியலில் இருந்து விலகாமல் அதிகார மோகம் கொண்டு அலைவதும் நம் நாடு ஏன் இந்தளவு பின்னடைந்து காணப்படுகிறது என்பதும் இப்போதுதான் பகிரங்கமாக தெரிகிறது.

பதவி, அதிகாரங்களை வைத்துக்கொண்டு நாட்டுக்கு ஒன்றும் செய்யாமல், வாழ்நாள் முழுவதும் உசுப்பேற்றும் கதைகளை மட்டும் பேசும் அரசியல்வாதிகள் ஜெசிந்தாவின் பதவி விலகலை மனதில் கொள்தல் வேண்டும். அதில் கற்றுக்கொள்ளவேண்டியவை ஏராளம்.

# உக்ரைன் - ரஷ்யப் போர் ஏன் இன்னமும் தொடர்கிறது?

உக்ரைன் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி தொடர்ந்த போர், புத்தாண்டில் தொடர்ந்தும் நீடிப்பது உலக அளவில் கவலை தரும் விடயம். ஏற்கனவே, போரின் விளைவாக உக்ரைன் மற்றும் ரஷ்யாவில் இருந்து மற்ற நாடுகளுக்கு கோதுமை, சோளம் மற்றும் பெற்றோலியம் சார்ந்த எரிபொருட்கள் ஆகியவற்றின் ஏற்றுமதிகள் தடைப்பட்டுள்ளன. அதன் விளைவாக ஆசிய - ஆபிரிக்க நாடுகள் மட்டுமல்ல, ஐரோப்பிய நாடுகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க பாதுகாப்புத்துறை அனுமானப்படி இந்தப் போரில் ஈடுபட்டுள்ள இரு நாடுகளும் ஒட்டு மொத்தமாக இரண்டு இலட்சம் வீரர்களை இழந்துள்ளன. ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் கணிப்பின்படி ஜனவரி 15ஆம் தேதி வரை அப்போரில் குழந்தைகள் உட்பட 7,000 அப்பாவி மக்கள் உயிரிழந்துள்ளார்கள். அமெரிக்காவின் கூற்றுப்படி 20,000 போரில் ஈடுபடாத சாதாரண மக்கள் இந்தப் போரில் உயிரிழந்துள்ளார்கள்.

உக்ரைனில் போரின் விளைவாக பல முக்கிய நகரங்கள் தரைமட்டமாகியுள்ளன. ஏறத்தாழ ஒரு கோடியே 74 இலட்சம் மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளதாக ஐ.நா. மனித உரிமை ஆணையம் கூறுகிறது.



ரஷ்ய அதிபர் புட்டின் இந்தப் போரில் ரஷ்யா அணு ஆயுதங்களை உபயோகிக்காது என்று மற்ற நாடுகள் எண்ணக்கூடாது எனப் பலமுறை எச்சரித்துள்ளார். அத்தகைய ஆபத்தான சூழ்நிலை இருந்த போதிலும், ஐக்கிய நாடுகள் சபையும் அதற்கு செயலாக்கம் அளிக்கும் பாதுகாப்பு கவுன்சிலும் போரை முடிவுக்கு கொண்டுவர உருப்படியான முயற்சிகள் எதையும் இதுவரை எடுக்கவில்லை.

இதற்கு முக்கிய காரணம், 15 அங்கத்தினர் கொண்ட ஐ.நா. பாதுகாப்பு கவுன்சலின் 'வீட்டோ' உரிமை பெற்ற நிரந்திர அங்கத்தினர்களான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் செயற்பாடே காரணம். ஆகவே, அவர்களின் இணக்கம் இருந்தால்தான் உக்ரைன் போரை முடிவுக் கொண்டு வரமுடியும். அதற்கான முயற்சிகள் எதுவும் பாதுகாப்பு சபையில் இதுவரை வெற்றி பெறவில்லை.

இந்தியாவும் பாகிஸ்தானும் கார்க்கில் போரில் பத்து நாட்கள் மோதிக்கொண்ட போதே, அது அணு ஆயுதப்போராக மாறும் ஆபத்து ஏற்படலாம் என்று ஐரோப்பிய, அமெரிக்க அரசுகள் கூக்குரலிட்டன. ஆனால், அதைவிட பயங்கரமான அணு ஆயுதப்போர் மூளும் சூழ்நிலை உக்ரைனில் நிலவினாலும் அதை இந்த நாடுகள் ஏன் கண்டு கொள்ளவில்லை?

அதற்கு முக்கிய காரணம் தற்போது உலகில் நிலவும் 'பிரெட்டன்வுட்' ஒழுங்கு முறையாகும். இரண்டாம் உலகப்போரின் இறுதிக் கட்டத்தில், அமெரிக்காவின் தலைமையில் மேற்கத்திய நாடுகள் சர்வதேச பொருளாதாரத்தை வழிநடத்த 'பிரெட்டன்வுட்' ஒப்பந்தத்தை உருவாக்கின. அந்த ஒப்பந்தத்தின் வாயிலாக உலக நாடுகள் போரைத் தவிர்த்து வாழ பல்வேறு ஒழுங்குமுறைகள் அமைக்கப்பட்டன. அவற்றின் விளைவாகவே அமெரிக்க டொலர் உலக பொருளாதரத்தின் அடிப்படை செலாவணியாக தற்போது கருதப்படுகிறது.

இந்த 'பிரெட்டன்வுட்' ஒழுங்குமுறைதான் இன்றுவரை அமெரிக்கா உலகின் ஒரே வல்லரசாக ஆளுமை செய்ய உதவுகிறது. 'பிரெட்டன்வுட்' ஒப்பந்தத்தில் பங்குபெற அப்போதைய வல்லரசுகளில் ஒன்றான சோவியத் யூனியன் மறுத்து விட்டது. சோவியத் அரசுக்கும் அமெரிக்காவுக்கும் நடந்த பனிப்போருக்கு அதுவும் ஒரு காரணமாகும்.

அந்தப் பனிப்போர் காலத்தில், ஐரோப்பாவில் சோவியத் யூனியனின் அச்சுறுத்தலை தவிர்க்க, அமெரிக்கா மற்றும் 30 ஐரோப்பிய நாடுகள் அங்கம் வகிக்கும் 'நேட்டோ' பாதுகாப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. 'நேட்டோ' படைகள் அமெரிக்காவுடன் இணைந்து ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் போர்களில் பங்குபற்றின. 'நேட்டோ' அமைப்பு 1991இல் சோவியத் யூனியன் சிதறுண்ட பிறகு, ஐரோப்பாவில் ஏற்பட்ட பூகோள மற்றும் அரசியல் மாற்றங்களை தனக்கு சாதகமாக உபயோகிக்க ஆரம்பித்தது. ரஷ்யாவால் மீண்டும் ஐரோப்பிய நாடுகளுக்கு அச்சுறுதல் ஏற்படலாம் என்று காரணம் காட்டி, அமெரிக்காவுடன் சேர்ந்து ரஷ்யாவின் எல்லை நாடுகளில் 'நேட்டோ' தன்னை பலப்படுத்தி வருகிறது. இந்த முயற்சியின் முன்னணியில் ரஷ்யாவின் பங்காளி நாடான உக்ரைனும் ஒன்று. அதைக் கண்டு கலக்கம் கொண்ட ரஷ்யா 'நேட்டோ'வின் முயற்சிகளை உக்ரைனில் தவிர்ப்பது தனது படையெடுப்புக்கு ஒரு காரணம் என்று கூறிகிறது. இத்தகைய சந்தேக சூழ்நிலையை தவிர்க்க 'நேட்டோ' அமைப்பு இதுவரை எந்தமுயற்சியும் மேற்கொள்ளவில்லை.

அதற்கு மாறாக, 'நேட்டோ' அமைப்பு அமெரிக்காவின் உந்துதலுடன் ரஷ்யாவை எதிர்த்து உக்ரைன் வெற்றி பெற பெருமளவில் பொன்னும் பொருளும் ஆயுதங்களும் அளித்து வருகின்றது. 'கீல் இன்ஸ்டிடியூட்' என்ற அரசு சாரா அமைப்பு கடந்த ஆண்டு ஜனவரி 24 முதல் நவம்பர் 22 வரை மேற்கொண்ட கணிப்பின்படி, உக்ரைனுக்கு 46 நாடுகள் ஒட்டுமொத்தமாக அளித்த உதவியின் மதிப்பு 109 பில்லியன் யூரோ (ஏறத்தாழ 9601 கோடி ரூபா). அந்த உதவியில் அமெரிக்காவின் பங்கு 53 வீதமாகும். இந்தப் போர் தொடர்வதற்கு, இந்த பொருளாதார மற்றும் ஆயுத உதவிகள் உக்ரைனுக்கு தரும் உந்துதல் மற்றொரு முக்கிய காரணமாகும்.

சீனாவுக்கும் ரஷ்யா இருந்த நெருங்கிய உறவு 1961இல் இருந்து விரிசல் காண ஆரம்பித்தபோது அதை அமெரிக்க அதிபர் நிக்சன், அமெரிக்காவுக்கு சாதகமாக உபயோகிக்க ஆரம்பித்தார். அவருக்குப் பின் வந்த அதிபர்களும் அமெரிக்க - சீன உறவை மேலும் வலுப்படுத்தினர். அமெரிக்கா மற்றும் அதன் நேச நாடுகள் சீனாவில் பெருமளவில் முதலீடு செய்ய, சீனாவில் தொழில் வளர்ச்சி உலக அளவில் பெருகியது. அமெரிக்கா தனது சீன உறவை, தனது ஒரு முனை உலக ஆதிக்கத்துக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டது.

அமெரிக்க - சீன உறவில் ஏற்பட்ட முன்னேற்றத்தை சீனாவும் தனது பொருளாதாரத்தையும் போர்ப்படைகளின் திறனையும் விரிவுபடுத்த உபயோகித்துக் கொண்டது. சீனா தற்போது உலக பொருளாதாரத்தில் வலிமையான நாடுகள் பட்டியலில் இரண்டாமிடத்தை வகிக்கிறது. அதற்கு ஏற்றபடி சீன இராணுவமும் உலகிலேயே வலிமை வாய்ந்ததாக கருதப்படுகிறது.

அமெரிக்காவின் தலைமையில் மேற்கத்திய நாடுகளின் 'பிரெட்டன்வுட்' ஒழுங்குமுறைக்கு எதிரான கருத்து, வளர்ச்சி அதிகம் காணாத உலக நாடுகளில் தொடர்ந்து பல ஆண்டுகளாகப் பரவி வருகிறது. முக்கியமாக பன்னாட்டு வணிகம் உலக மயமாக்கப்பட்ட பிறகு அதைப் பயன்படுத்தி வளர்ச்சி பெற்ற ரஷ்யா, சீனா, இந்தியா, பிரேசில் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் உலக ஒழுங்குமுறை பாரபட்சமின்றி எல்லா நாடுகளும் பயன்படும் விதமாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று கருதத் தொடங்கின. ரஷ்யா மீண்டும் வலிமை பெறத் தொடங்கி சீனாவுடனான தனது உறவைப் புதுப்பித்தது. இந்தியாவும் 1962 சீனப் போருக்குப் பின் சிதறுண்ட சீன உறவைப் புதுப்பிக்க ஆரம்பித்தது. ஆகவே, இந்த நான்கு நாடுகளும் உலகின் 'பிரெட்டன்வுட்' ஒழுங்கு முறையை மாற்றி அமைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பிரிக்ஸ் (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் ஆங்கில முதல் எழுத்து) என்ற அமைப்பை ஆரம்பித்து 2009 முதல் ஒருங்கிணைந்து செயற்படத் தொடங்கின. இந்த அமைப்பை அமெரிக்காவும் அதன் மேற்கத்திய பங்காளி நாடுகளும் சந்தேகக் கண்ணுடன் பார்க்க ஆரம்பித்தன.

2013ஆம் ஆண்டு ஷி ஜின்பிங் சீன அதிபராக பதவி ஏற்ற பின்பு உலக ஆளுமை கனவுகள் சீனாவை ஆக்கிரமிக்க தொடங்கின. சீன அதிபர் படிப்படியாக, சீன கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பிலும் சீன அரசமைப்பு மற்றும் கம்யூனிச அதிகாரத்தை நிலைநாட்ட உதவும் இராணுவத்தின் உள்ளமைப்பிலும் தனது ஆதரவை பலப்படுத்திக் கொண்டார். அதன் பிறகு அவர் எடுத்த மனித உரிமை மீறல்கள் மற்றும் உலக வணிகத்தில் கையாண்ட முறைகளும் மேற்கத்திய நாடுகளிடையே சலசலப்பை ஏற்படுத்தின.

ஹொங்கொங், பல ஆண்டுகளாக சீனாவின் ஒரு பகுதி ஆனாலும், ஓரளவு தன்னிச்சையுடன் இயங்கி வந்தது. ஆனால் ஷி ஜின்பிங் தனது ஆளுமையின் கீழ் அதைக் கொண்டு வர எடுத்த தடலடி முயற்சிகள் மேற்கத்திய நாடுகளிடையே சலசலப்பை எற்படுத்தின. மேலும், தென் சீனக் கடலில் ஷி ஜின்பிங் சீனாவின் கடல் எல்லையை விரிவாக்கி அதிலுள்ள பல குட்டித் தீவுகளின் மீது தீவிரமாக உரிமை கொண்டாட ஆரம்பித்தார். சிலவற்றை சீனா ஆக்கிரமித்தது. அதனால் சீனாவுடனான உறவை தென்கிழக்கு ஆசிய நாடுகள் சந்தேகக் கண்ணுடன் பார்க்க ஆரம்பித்தன. தென் சீனக் கடலில் கோலோச்சி வந்த அமெரிக்க கடற்படை அடிக்கடி சீனப் போர் விமானங்களையும் போர்க் கப்பல்களையும் எதிர்கொள்ள ஆரம்பித்தது. இது அமெரிக்காவின் சீன உறவில் விரிசல்களை ஏற்படுத்தியது. இப்போது சீனா தாய்வான் தீவை ஆக்கிரமிப்பதாக பயமுறுத்தி வருகிறது.

மேலும் 2013இல் ஷி ஜின்பிங் சீனாவை ஆசியா மற்றும் ஐரோப்பியப் பகுதிகளுடன் இணைத்து, சீனாவின் செல்வாக்கைப் பெருக்க 'பால மற்றும் சாலை இணைப்பு' (Belt and Road Initiative) திட்டத்தைப் பெருமளவில் மேற்கொண்டுள்ளார். இதன் விளைவாக சீனாவின் அரசியல் மற்றும் வணிக செல்வாக்கு தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளில் பெருமளவில் பரவியுள்ளது. அத்தகைய முயற்சிக்குப் பாதுகாப்பளிக்க சீன போர்க் கப்பல்கள் இந்திய-பசிபிக் பெருங்கடலில் அதிகளவில் பிரவேசிக்கத் தொடங்கியுள்ளன. இந்தியாவின் சீன எல்லையில், சீனப் படைகள் அத்துமீறி பிரவேசிப்பது வழக்கமாகிவிட்டது.


சீனாவின் பெருகி வரும் ஆதிக்கத்தை கட்டுக்குள் வைக்க இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் குவாட் என்னும் நாற்கர கட்டமைப்பை அமைத்துள்ளன. இந்த முயற்சியை சீனா தனது ஆளுமைக்கு எதிரான சவாலாகப் பார்க்கிறது.

இத்தகைய சூழ்நிலையில், தொடர்ந்து வரும் உக்ரைன் போரில் உலகின் மூலோபாய பாதுகாப்பு அமைப்புகள் உருமாறி வருகின்றன. அமெரிக்க - ஐரோப்பிய நாடுகள் ரஷ்யா மீது திணித்துள்ள பொருளாதார மற்றும் வியாபாரத் தடைகளை பெரும்பான்மையான ஆசிய - ஆபிரிக்க நாடுகள் பின்பற்ற மறுக்கின்றன. இவற்றில் இந்தியா, சீனா, துருக்கி, ஈரான், தென்னாபிரிக்கா, சவூதி அரேபியா ஆகிய நாடுகள் அடங்கும். இந்நாடுகள் தங்கள் நாட்டின் சுயநலனுக்காகவே அத்தகைய முடிவுகளை எடுக்கின்றன. ஆகவே, இந்த நாடுகள் ஒருங்கிணைந்து போரை நிறுத்த முயற்சிக்குமா என்பது சந்தேகமே.

ஏனெனில், போரை முடிக்க பேச்சுவார்த்தைகள் தொடங்க உக்ரைன் முன் வைத்துள்ள நிபந்தனை ரஷ்யா வசமுள்ள ரஷ்ய வம்சாவளியினர் வாழும் கிழக்கு உக்ரைன் மற்றும் க்ரிமியா பகுதிகளை விட்டு முழுமையாக அகல வேண்டும் என்பதே. அதற்கு மாறாக, அமைதிப் பேச்சுவார்த்தைக்கு ரஷ்யாவின் நிபந்தனை - செப்டம்பர் 2022வரை தான் ஆக்கிரமித்த உக்ரைன் பகுதிகளை தன் வசம் நிரந்தரமாக அளிக்க வேண்டும் என்பதே.

இத்தகைய இழுபறியான சூழ்நிலையில், அமெரிக்காவும் 'நேட்டோ' நாடுகளும் போரில் வெற்றி காணாவிட்டாலும் ரஷ்யாவின் போர்த்திறனை அழிக்க கங்கணம் கட்டிக் கொண்டு செயற்படுகின்றன. ஆகவே, அவை நேரடியாக போரில் ஈடுபடத் தயக்கம் காட்டினாலும், பொன்னையும் பொருளையும் அளித்து உக்ரைனை உசுப்பி விட்டுக்கொண்டிருக்கின்றன.

இந்த சமயத்தில் கோவிட்-19 தொற்றின் விளைவாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் உலக பொருளாதாரத்தில் மிகப்பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இந்தியா ஓரளவு இதன் தாக்கத்தில் இருந்து தன்னை மீட்டுக் கொண்டாலும், அமெரிக்கா, சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார சரிவு இந்த ஆண்டும் தொடரும் என்பது வல்லுனர்களின் கணிப்பு. உலக பொருளாதாரப் பின்னடைவு உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வர ஐ.நாவை ஊக்குவிக்குமா? அதுவும் சந்தேகமே. ஆகவே, வரும் மாதங்களில் போரின் உக்கிரம் குறைந்து, இரு நாடுகளும் களைத்தாலும் சீற்றம் காட்டுவதில் குறைவு இருக்காது. இந்த இழுபறி இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கும்? தற்போது, போரின் போக்கை அனுமானிக்க, ஜெலன்ஸ்கி மற்றும் புட்டின் ஆகியோரின் ஜாதகத்தை டி.வி.ஜோசியர்தான் பார்க்கவேண்டும்.



கேர்ணல்
ஆர்.ஹரிஹரன்

# இன்றைய நாளில்..

- 1863 – இலங்காபிமானி (Ceylon Patriot) இதழ் யாழ்ப்பாணத்தில் டபிள்யூ.சி.கதிரவேற்பிள்ளை என்பவரால் வெளியிடப்பட்டது.
- 1918 – 30 வயதிற்கு மேற்பட்ட குறைந்தபட்ச சொத்துரிமை கொண்ட பிரித்தானியப் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1959 – கண்டம் விட்டுக் கண்டம் பாயும் முதலாவது டைட்டான் ஏவுகணை புளோரிடாவில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.
- 2016 – தாய்வான் நிலநடுக்கத்தில் 117 பேர் உயிரிழந்தனர்.

## நக்கல் நமசிவாயம்



# 13ஆவது திருத்தத்தை ஒரு தீர்வாக ஏற்கவோ ஆரம்பப் புள்ளியாக கருதுவதற்கோ தயாராக இல்லை

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



ஒற்றையாட்சியின் 13ஆவது திருத்தத்தை ஒரு தீர்வாக ஏற்கவோ தீர்வுடைய ஆரம்பப் புள்ளியாக கருதுவதற்கோ தயாராக இல்லை - என நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கறுப்பு தினப் போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றையதினமானது வேடிக்கையான விடயம். சிங்கள தேசத்தில் தங்களுடைய மக்களே ஒரு கரிநாள் அனுஷ்டிக்கின்ற நிலையில் தங்களாலேயே நிராகரிக்கப்பட்ட தலைவர் ஜனாதிபதி என்ற பதவியினை வைத்துக்கொண்டு தேர்தலில் போட்டி போட்டு வெல்லமுடியாத நிலையில் உள்ளார். பொருளாதார ரீதியாக நாடு அழிந்துபோன நிலையில் அந்தப் பதவியை வைத்து தனக்கொரு கொண்டாட்டத்தை நடத்துவதற்கு இன்றைக்கு பல நிகழ்வினை செய்துகொண்டிருக்கின்றார்.

உலகத்திற்கு சொல்லுகின்ற செய்தி என்னவென்றால், இந்த சுதந்திர தினத்தினை நடத்தாமல் விட்டால் உலகம் பார்த்து சிரிக்கும் என்பதுதான். இன்றைக்கு பார்த்து சிரிக்கப்போவது தேசத்தின் சிங்கள மக்களுடைய தலைவர் கொண்டாடக்கூடிய நிலையினை நிராகரித்து வானத்தைப் பார்த்து துப்பிக்கொண்டு இருக்கின்ற நிலையை பார்த்தே உலகம் சிரிக்கும் என்பதை ஜனாதிபதி விளங்கிக்கொள்வார்.

உண்மையான உரிமை, விடுதலையை செயற்படுவதற்கு உறுதியான கோணத்திலே முக்கிய முடிவுகளை எடுக்கவேண்டும்

சிங்கள தரப்புகள் கூறுவது போல தமிழர்களின் அபிலாஷைகளுக்கு தமிழ்தேசம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒற்றையாட்சி 13ஆவது திருத்தத்தினை ஒரு தீர்வாக ஏற்கவோ, தீர்வுடைய ஆரம்பப் புள்ளியாக கருதுவதற்கோ தயாராக இல்லை.இது இன்றைய நிகழ்ச்சியின் வாயிலாக எடுத்துக் கூறப்படுகின்றது - என்றார்.

# நல்லூரானின் நெற்புதிர் அறுவடை விழா







நல்லூரானின் நெற்புதிர் அறுவடை விழா நேற்று முன்தினம் (04) வெகு சிறப்பாக நடைபெற்றது.


தைப்பூசத்திற்கு முதல்நாள் கொண்டாடப்படும் இப் பண்பாட்டு விழாவில் கோவில் அறங்காவலரும், சிவாச்சாரியாரும் முதலாவது புதிரை அறுவடை செய்ய மட்டுவிலில் உள்ள ஆலயத்திற்கு சொந்தமான வயலுக்கு செல்வர்.

அந்த வயலில் அறுவடை செய்யும் நெல்லிலிருந்து அமுது செய்து கந்தனுக்கு படையல் பூசைகள் இடம் பெறும். அதனை தொடர்ந்து பக்தர்களுக்கும் அமுது வழங்கப்படும்.

# வட மாகாணத்தில் சுதந்திர தினத்தை முன்னிட்டு கைதிகள் விடுதலை



**நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலை யிலிருந்து பெண் கைதி ஒருவரும் நான்கு ஆண் கைதிகளுமாக ஐந்து கைதிகள் விடுவிக்கப்பட்டனர். (வவுனியா நிருபர்)**





**நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண சிறைச்சாலையிலிருந்து 7 ஆண் கைதிகளும் ஒரு பெண் கைதியுமாக 08 கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். (யாழ். நிருபர்)**

## தியாக தீபத்தின் தூபியில் தாலி கட்டி புது வாழ்வை ஆரம்பித்த தம்பதி



யாழ்ப்பாணத்தில் புதுமணத் தம்பதி, நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியில் தாலி கட்டி கடந்த வெள்ளிக்கிழமை (03) புது வாழ்வை ஆரம்பித்துள்ளனர்.

தமிழ் மீதும் தமிழர்களது தியாகத்தின் மீதும் அவர்கள் கொண்ட பற்றினால் அவர்கள் இவ்வாறு திருமணம் செய்துகொண்டனர்.

திருநிறைச்செல்வன் விவேகானந்தா தமிழ்ஈசனும் திருநிறைச்செல்வி போசிந்தாவும் இவ்வாறு திருமணப் பந்தத்தில் இணைந்துள்ளனர். தமிழ்ஈசன் தனியார்துறையில் ஆசிரியராக கடமையாற்றி வருகின்றார்.

அவர்களது திருமணத்திற்கு சமூக ஊடகங்களிலும் நேரிலும் வாழ்த்துகள் சொல்வதோடு அவர்களது இந்தச் செயலை பலரும் பாராட்டி வருகின்றனர்.

# மான் சின்னத்தைக்கொண்ட வேட்பாளர்கள் ஒற்றுமையாக செயற்பட வேண்டும்


## யாழ். மாவட்ட எம்.பி. விக்னேஸ்வரன் வேண்டுகோள்

மான்கள் எப்பொழுதும் கூட்டமாகத்தான் வாழும். அதுபோல் மான் சின்னத்தைக்கொண்ட நமது வேட்பாளர்களும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் – என தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ். மாநகர சபை, நல்லூர் பிரதேச சபை வேட்பாளர்களுக்கு சி.வி.விக்னேஸ்வரன் ஆலோசனை வழங்கியுள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் யாழ். மாநகர சபை, நல்லூர் பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்களுக்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் (04) தமிழ் மக்கள் கூட்டணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணனின் அலுவலகத்தில் நடந்தது.

இதில், யாழ். மாநகர சபை, நல்லூர் பிரதேச சபைக்கான தலைமை வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

யாழ். மாநகர சபைக்கு முதல்வர் வேட்பாளராக வி.மணிவண்ணனும், பிரதி முதல்வர் வேட்பாளர்களாக டேமியன், பிரபாகரன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். தமிழ் மக்கள் கூட்டணி ஆட்சியைப் பிடித்தால், இருவரும் தலா 2 வருடங்கள் பிரதி முதல்வர்களாக பதவி வகிப்பர்.




நல்லூர் பிரதேச சபை தவிசாளர் வேட்பாளராக பா.மயூரன் தெரிவாகினார்.

இங்கு கருத்து தெரிவித்த விக்னேஸ்வரன், எதிர்த்தரப்பு வேட்பாளர்களை விமர்சிப்பதை தவிர்த்துவிட்டு, நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதை பிரசாரமாக முன்னெடுக்கும்படியும் பிரசாரத்தின்போது நாகரிகத்தைக் கடைப்பிடிக்கும் படியும் கேட்டுக்கொண்டார்.

# ரந்தெனிகல நீர்த்தேக்கத்தைச் சூழ நன்னீர் மீன் வளர்ப்பு துரிதப்படுத்தப்படும்

## கண்டி மாவட்ட செயலாளர் தெரிவிப்பு



**(கண்டி நிருபர்)**

ரந்தெனிகல நீர்த்தேக்கத்தில் நன்னீர் மீன் வளர்ப்பு துரிதப்படுத்தப்படும் என கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் தெரிவித்தார். கண்டி மாவட்ட விவசாய குழு கூட்டத்தில் மாவட்ட செயலாளர் இதனைத் தெரிவித்து பணிப்புரையும் வழங்கினார்.

மேற்படி பிரதேசத்தில் சிறிய குளங்கள் உட்பட 54 நீர் நிலைகளில், நன்னீர் மீன் வளர்ப்பு இடம் பெற்று வருகிறது. இருப்பினும் பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசங்களினூடாக அவ்விடங்களுக்கு செல்வதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

அதன் விளைவாகவே கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் அதிகாரிகளுக்கு மேற்படி உத்தரவை விடுத்தார். அதன்படி, நன்னீர் மீன் வளர்ப்பு நீர் நிலைகளுக்கு செல்லக்கூடிய வகையில் வனஜீவராசிகள் திணைக்களம் அனுமதி வழங்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

உடுதும்பர பிரதேச செயலாளர் திருமதி நிலூஷா மனோரத்னவின் வேண்டுகோளுக்கு இணங்க கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு ரன்தெனிகல நீர்த்தேக்கத்தில் மீன்பிடித் தொழில் நடத்துவதற்கான அனுமதி கிடைத்துள்ளதாகவும் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

அவ்விடங்களுக்கு வன ஜீவராசிகள் திணைக்களத்திற்கு சொந்தமான பாதுகாப்பு வனப்பிரதேசம் வழியாக செல்ல வேண்டியிருப்பதால் வனஜீவராசிகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது. ஆனால் இதுவரை வனவிலங்கு திணைக்களத்தின் சிபாரிசு கிடைக்கப்பெறவில்லை.

உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் பிரகாரம் குறைந்த விலையில் போசாக்கு உணவுகளை பெற்றுக்கொள்ளும் தேசிய இலக்கிற்கு அமைவாக இத்திட்டம் முன்னெடுக்கப் படுவதாக மாவட்ட செயலாளர் மேலும் சுட்டிக் காட்டினார்.

தற்போது, பொல்கொல்லை, விக்டோரியா நீர்த்தேக்கம் மற்றும் 54 பிராந்திய ஏரிகள் மற்றும் சில நீர்த்தேக்கங்களில் அரசாங்கத்தின் அனுமதியின் கீழ் நன்னீர் மீன்பிடித்தல் மேற்கொள்ளப்படுகிறது. இந்த நீர்த்தேக்கங்களில் நன்னீர் மீன்பிடித் தொழில்துறையினரால் உருவாக்கப்பட்ட சங்கங்களால் இக்கைத்தொழில் மேற்கொள்ளப்படுகிறது.

தற்போது இதற்கான கட்டணமான செலுத்தப் படும் 50ஆயிரம் ரூபாவை மேலும் குறைக்க முடியுமானால் நன்னீர் கைத்தொழில் வளர்ச்சிக்கு அது இன்னும் வசதியாக இருக்கும் என மாவட்ட செயலாளர் தெரிவித்தார். நீரியல் வாழ்வு மற்றும் பயிர் அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுக்கு இது விடயமாக சுட்டிக் காட்டினார்.

# சிவனொளிபாதமலைக்கு 03 நாட்களில் 25 ஆயிரம் பக்தர்கள் வருகை

**(மஸ்கெலியா நிருபர்)**

சிவனொளிபாதமலைக்கு தரிசனம் செய்யவென கடந்த வியாழன், வெள்ளி, சனி ஆகிய நாட்களில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் வருகை தந்துள்ளதாக நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர தெரிவித்தார்.

விடுமுறை தினங்கள் என்பதால் அதிக எண்ணிக்கையிலான யாத்திரிகர்கள் வருகை தந்ததாக அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு வருகை தந்த யாத்திரிகர்கள் புகை யிரத வழியாகவும் அரச, தனியார் பஸ் வழி யாகவும் சிறிய ரக வேன், கார் மற்றும் இருசக்கர வாகனம், முச்சக்கர வண்டிகள் மூலம் தொடர்ந்து வருகை தந்ததாக அவர் தெரிவித்தார்.

மேலும், வாகனத் தரிப்பிடங்கள் முற்றிலும் நிரம்பி விட்டதால் நல்லதண்ணி -மரே மற்றும் நல்லதண்ணி -மஸ்கெலியா பிரதான வீதியில் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் வாக னங்கள் நிறுத்தப்பட்டன. இதேவேளை, சிவில் உடையில் உள்ள அதிகாரிகள் பாதுகாப்புக் கடமைகளில் அதிக எண்ணிக்கையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



**நுவரெலியா மாகஸ் தோட்ட கீழ்ப்பிரிவு போகஸ் இளைஞர்கள் சங்கத்தின் மூன்றுவருட பூர்த்தி விழா கடந்த வெள்ளிக்கிழமை ஸ்ரீரங்கா கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. (படப்பிடிப்பு: செ.திவாகரன்)**

# இ.தொ.கா.வின் தேர்தல் பிரசாரம் இரத்தினபுரியில் ஆரம்பம்



**(பெல்மதுளை நிருபர்)**

ஏதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் தமது வேட்பாளர்களை ஆதரித்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தேர்தல் பிரசாரங்களை இரத்தினபுரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் (04) சுதந்திர தினத்தன்று முதன் முதலாக ஆரம்பித்தது.

இரத்தினபுரி சிவன் கோயிலில் நடைபெற்ற விசேட பூசை வழிபாட்டின் பின்னர் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த வழிபாட்டில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உப தலைவர் எஸ். ராஜமணி, முன்னாள் உப செயலாளர் ரூபன் பெருமாள், இரத்தினபுரி மாநகர சபையின் வேட்பாளர்கள், பிரதேச சபையின் வேட்பாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

| | வெள்ளிக்கிழமை 2023.02.03 | சனிக்கிழமை 2023.02.04 |
|---|---|---|
| மஹஜன சம்பத - சீட்டிழுப்பு இலக்கம் | 5020 | 5021 |
| மஹஜன சம்பத - அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 23,688,968.00 | ரூ. 24,214,126.00 |
| மஹஜன சம்பத - ஆங்கில எழுத்து | T | U |
| மஹஜன சம்பத - வெற்றி இலக்கங்கள் | 9 9 5 3 8 7 | 9 0 9 2 5 6 |
| கொவிசெத - சீட்டிழுப்பு இலக்கம் | 3262 | 3263 |
| கொவிசெத - அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 76,185,500.00 | ரூ. 76,472,104.80 |
| கொவிசெத - ஆங்கில எழுத்து | J | G |
| கொவிசெத - வெற்றி இலக்கங்கள் | 07 74 77 78 | 04 48 49 55 |
| ஜாதிக சம்பத - சீட்டிழுப்பு இலக்கம் | 1475 | 1476 |
| ஜாதிக சம்பத - அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 10,060,901.20 | ரூ. 10,112,320.00 |
| ஜாதிக சம்பத - வெற்றி இலக்கினம் | | தனுசு |
| ஜாதிக சம்பத - வெற்றி இலக்கங்கள் | 8 3 0 8 1 2 | 8 9 3 7 5 1 |
| தன நிதானய - சீட்டிழுப்பு இலக்கம் | 1050 | 1051 |
| தன நிதானய - அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 81,761,207.20 | ரூ. 81,932,745.20 |
| தன நிதானய - ஆங்கில எழுத்து | S | T |
| தன நிதானய - வெற்றி இலக்கங்கள் | 05 14 20 80 | 38 60 61 74 |
| ராசி சுப பலன் (Handahana) - சீட்டிழுப்பு இலக்கம் | 329 | 330 |
| ராசி சுப பலன் - அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 2,735,694.40 | ரூ. 2,500,000.00 |
| ராசி சுப பலன் - வெற்றி இலக்கினம் | தனுசு | மேஷம் |
| ராசி சுப பலன் - வெற்றி இலக்கங்கள் | 08 14 32 48 | 09 36 39 62 |
| ராசி சுப பலன் - விசேட இலக்கினம் | தனுசு | மேஷம் |
| மெகா பவர் - சீட்டிழுப்பு இலக்கம் | 1368 | 1369 |
| மெகா பவர் - அடுத்த மெகா சுப்பர் பரிசு | ரூ. 297,788,002.00 | ரூ. 297,954,162.00 |
| மெகா பவர் - ஆங்கில எழுத்து | N | O |
| மெகா பவர் - சுப்பர் இலக்கம் | 18 | 10 |
| மெகா பவர் - வெற்றி இலக்கங்கள் | 06 26 68 74 | 01 08 32 61 |
| மெகா பவர் - அடுத்த பவர் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 | ரூ. 10,000,000.00 |
| மெகா பவர் - அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 | ரூ. 10,000,000.00 |

# வசாவிளான் மேற்கு மானம்பிராய் பிள்ளையார் ஆலய பூஜை வழிபாடுகளுக்கு பொதுமக்களுக்கு அனுமதி!

## அமைச்சர் டக்ளஸின் முயற்சிக்கு வெற்றி





அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் நீண்டகாலமாக உயர் பாதுகாப்பு வலயத்தைக் காரணங்காட்டி பூஜை வழிபாடுகளுக்கு தடைவிதித்திருந்த வசாவிளான் மேற்கு மானம்பிராய் பிள்ளையார் கோயிலில் பூசை வழிபாடுகளை மேற்கொள்ள பொதுமக்களுக்கு நேற்றுமுதல் (05) அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள குறித்த ஆலயத்திற்கு பக்தர்கள் சென்றுவர ஆரம்ப காலங்களில் அனுமதி கொடுக்கப்பட்ட போதிலும் பின்னர் பாதுகாப்பு விடயங்களை காரணங்காட்டி மறுக்கப்பட்டது.

இந்நிலையில், ஆலய நிர்வாகத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து தமது பூர்வீக ஆலயத்தில் பூஜை வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதி பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கிணங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாதுகாப்பு உயரதிகாரிகளுடன் குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி பொதுமக்கள் பூஜை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட்டது.

இதனடிப்படையில் இந்துக்களின் சிறப்பு நாளான தைப்பூச தினமான நேற்று (05) ஆலயத்திற்கு பக்தர்கள் செல்வதற்கு அனுமதி கொடுக்கப்பட்டதற்கிணங்க தைப்பூச வழிபாடுகள் மற்றும் சிறப்பு பொங்கல் நிகழ்வுகளை பொதுமக்கள் முன்னெடுத்திருந்தனர்.

குறித்த சிறப்பு பூசை வழிபாடுகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரதிநிதிகளாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் மற்றும் உதவி நிர்வாகப் பொறுப்பாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

அத்துடன், குறித்த பூஜை வழிபாடுகளில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி. வடக்கு பிரதேச நிர்வாகப் பொறுப்பாளரும் பிரதேச சபை உறுப்பினருமான அன்பு ஜெயபாலசிங்கம் மற்றும் குறித்த பிரதேச சபையின் உறுப்பினர்கள், பொதுமக்கள் என 50இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு பூசை வழிபாடுகளை முன்னெடுத்திருந்தனர்.

இதனிடையே பாதுகாப்புத் தரப்பினரும் பொதுமக்கள் சென்றுவர அனுமதி வழங்கப்பட்ட வசாவிளான் மேற்கு மானம்பிராய் பிள்ளையார் கோயிலில் பூஜை வழிபாடுகளுக்கு தமது முழுமையான ஒத்துழைப்புகளையும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மருதானை அமைதி ஆர்ப்பாட்டத்தின் மீது நீர்த்தாரை – கண்ணீர்ப்புகைப் பிரயோகம்

## மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை



மருதானை எல்பிஸ்டன் கலையரங்குக்கு அருகில் இடம்பெற்ற அமைதி ஆர்ப்பாட்டத்தின் மீது நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த சம்பவம் இடம்பெற்ற நாள் மற்றும் அதற்கு மறுதினமும் தமது கண்காணிப்புக் குழுவொன்று குறித்த இடத்திற்குச் சென்று ஆரம்பகட்ட விசாரணைகளை முன்னெடுத்ததாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

முதற்கட்ட விசாரணையின் அறிக்கை, இன்று (06) மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன், அந்த அறிக்கையின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட தரப்பினரால், மருதானை எல்பிஸ்டன் கலையரங்கிற்கு முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை (03) மாலை சுதந்திரத்திற்கான சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

சத்தியாக்கிரகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட இடத்திற்கு வந்த பொலிஸார் மற்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இடையில் அமைதியின்மை ஏற்பட்டதுடன், பின்னர் அவர்களை கலைப்பதற்கு பொலிஸாரால் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

எதிர்ப்பு நடவடிக்கையின்போது கைதுசெய்யப்பட்ட பெண்ணொருவர் உள்ளிட்ட நால்வருக்கு நேற்று முன்தினம் (04) மாலை பிணை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மொட்டு – யானை அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் நடவடிக்கை தேர்தல் வெற்றிக்குப் பின் ஆரம்பிக்கப்படும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



தற்போதைய அரசாங்கம் தவறான கொள்கைகளைப் பின்பற்றி நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சிப்பதாகவும், இவர்களின் இத்தகைய செயற்பாடுகளினால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதிகரித்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ராஜபக்ஷ குடும்பம் இந்நாட்டை அழித்து வறிய நிலைக்கு இட்டுச் சென்றதாகவும்,சிறு குழந்தை முதல் முதியவர் வரை, அரச ஊழியர் முதல் கூலித் தொழிலாளி வரை அனைவரினதும் இயல்பு வாழ்க்கை வீழ்ந்துள்ளதாகவும், இந்நாட்டின் 220 இலட்சம் மக்கள் இனி எந்த ஆட்சியாளருக்கும், தலைவருக்கும், அரசியல்வாதிகளுக்கும் அடிமைகள் அல்ல எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ராஜபக்ஷவின் அடிமைத்தனத்தை இன்னமும் உறுதிப்படுத்தும் மொட்டு - யானை அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கான முதல் நடவடிக்கை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றிபெற்றதன் பின்னர் ஆரம்பிக்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பாணந்துறையில் நேற்று முன்தினம் (4) இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

உலகில் எந்த நாடும் பொருளாதாரத்தை சுருக்கி பிரச்சினைகளைத் தீர்த்ததாக இல்லை எனவும், தற்போதைய அரசாங்கம் பொருளாதாரத்தை சுருக்கி நாட்டுமக்களை அழிக்க முயல்வதாகவும், தேவையை குறைப்பதன் மூலம் நாட்டின் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்று நினைக்கிறார்கள் என்றாலும், அது தவறு எனவும், இந்தப் பொருளாதார மற்றும் சமூக வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்கு பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதே ஒரே தீர்வு எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

2019 இல் ஒரு தவறு செய்யப்பட்டதாகவும், 2023 இல் மக்கள் மற்றொருவருக்குப் பின்னால் ஓடுவதாகவும், இந்நாட்களில் பொய் சொல்லி தம்பட்டம் அடிக்கும் புரட்சியாளர்களுக்கு சர்வதேச ஆதரவு கிடைக்காது எனவும், எமது நாட்டைக் கட்டியெழுப்பவேண்டுமானால் அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் வர்த்தகம் செய்யும் திறன் வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# சட்டவிரோதமாக கடலட்டைகளை பிடித்த மூவர் கற்பிட்டியில் கைது




கற்பிட்டி இப்பன்தீவில் கடற்படையினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பில் சட்டவிரோதமாக கடலட்டைகளை பிடித்த 03 பேரை கடற்படையினர் நேற்று முன்தினம் (04) கைதுசெய்தனர்.

இதன்போது 17 சங்குகள், உபகரணங்களுடன் சுமார் 671 கடல் அட்டைகளும் டிங்கி படகொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்கள் 26 முதல் 54 வயதுக்குட்பட்ட கற்பிட்டி பிரதேசத்தில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 03 சந்தேக நபர்களும் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கற்பிட்டி மீன்பிடி பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# இலங்கையில் அதிகரிக்கும் வயோதிபர்களின் சனத்தொகை

2030ஆம் ஆண்டளவில் இலங்கையில் வயோதிபர்களின் சனத்தொகை 21% ஆக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதாக முதியோர்களுக்கான தேசிய சபை தெரிவித்துள்ளது.

இலங்கையின் வயோதிபர் எண்ணிக்கை, மொத்த சனத்தொகையில் 14.6% என்ற அளவில் உள்ளது.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முதியோர்களுக்கான தேசிய சபையின் 2020ஆம் ஆண்டு அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், 2020ஆம் ஆண்டில் அந்த சபை வழங்கிய வயோதிபர் அடையாள அட்டைகளின் எண்ணிக்கை 62,279 ஆகும்.

# 13ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட்டால் முஸ்லிம்களுக்கான உரிமைகளைப் பெற ஒன்றிணைந்து காய்நகர்த்த வேண்டும்

## சுற்றாடல்துறை அமைச்சர் நசீர் அஹமட் வலியுறுத்து




(அஷ்ரப் ஏ சமத்)

13ஆவது அரசியல் சரத்து வடக்கு, கிழக்கில் அமுல்படுத்தப்படுமேயானால் எமது முஸ்லிம் சமூகத்திற்குரிய சகல உரிமைகளையும் நாமும் சமமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்காக நமது முஸ்லிம் சமூகமும், எமது முஸ்லிம் அரசியல் தலைவர்களும், உலமாக்களும் சிந்தித்து ஒன்றிணைந்து காய்நகர்த்துதல் வேண்டும் - என சுற்றாடல்துறை அமைச்சர் நசீர் அஹமட் தெரிவித்தார்.

75ஆவது சுதந்திர தினத்தில் கொழும்பு பெரிய பள்ளிவாசலில் தேசியக் கொடியை ஏற்றியும் நாட்டுக்காகவும் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த தலைவர்களுக்காகவும் துஆப் பிரார்த்தனை நிகழ்வும் இடம்பெற்றன. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 35 வருட காலங்களுக்கு முன்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரவோடு இரவாக இணைக்கப்பட்டதன் விளைவாக நமது முஸ்லிம் சமூகம் பாரிய இன்னல்களையும் உரிமைகளையும் இழந்து பல பிரச்சினைகளை எதிர்நோக்கினோம். இதனால் முஸ்லிம் சமூகம் வடக்கு, கிழக்கில் அடிமைச் சமூகமாக மாறியது. வடக்கில் வாழ்ந்த முஸ்லிம் சமூகம் இரவோடு இரவாக வெளியேற்றப்பட்டது. அவர்களது காணி சொத்துகள் அபகரிக்கப்பட்டன. இன்றும் அந்த அவலநிலையிலிருந்து அகலவில்லை. இன்றும் வடக்கு வாழ் முஸ்லிம்களுக்கு எவ்வித தீர்வுகளும் எமது காணி நிலங்கள், சொத்துகள் நிவாரணம் கிடைக்கவில்லை. அந்தப் வரலாற்றுப் பிழைகளை நாம் ஒருபோதும் மீண்டும் இடம்பெறாமல் நாம் உன்னிப்பாக இருத்தல் வேண்டும்.

13ஆவது அரசியல் சரத்து வடக்கு, கிழக்கில் அமுல்படுத்தப்படுமேயானால் எமது முஸ்லிம் சமூகத்திற்குரிய சகல உரிமைகளையும் நாமும் சமமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்காக நமது முஸ்லிம சமூகமும் எமது முஸ்லிம் அரசியல் தலைவர்களும் உலமாக்களும் சிந்தித்து ஒன்றிணைந்து நாம் காய்நகர்த்துதல் வேண்டும்.

தமிழ்ச் சமூகம் தமது அரசியல் அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக சர்வதேசத்தினூடாக அரசுக்கு அழுத்தம் பிரயோகிக்கின்றார்கள். அத்துடன், 13ஐ அமுல்படுத்துவதற்கும் சர்வதேசத்தின் அழுத்தத்தை நாடுகின்றபோது, நாம் வெறுமனே கைகட்டிக் கொண்டு வேடிக்கை பார்க்கும் சமூகமாக இருக்கக்கூடாது.

நமக்குரிய சகல உரிமைகளையும் நாம் பெற்றதன் பின்புதான் தமிழ்ச் சமூகத்துடன் இணைந்துபோகக்கூடிய முறையில் நாம் பயணித்தல் வேண்டும். இந்த விடயத்தில் நாம் மீண்டும் பிழை விட்டுவிடக் கூடாது. இந்த விடயத்தில் அமைச்சரவையில் நானும் வெளிநாட்டு அமைச்சரும் சமூகம் சார்ந்த விடயங்களில் எங்களால் முடியுமான அளவு காய்நகர்த்தலை நகர்த்தி வருகின்றோம்.

இன்றைய பொருளாதார நிலையில் எந்தவொரு தலைவரும் இந்த நாட்டை கையேற்காத நிலையில் தன்னால் முடியுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக ஏற்றுள்ளார். அதற்காக முஸ்லிம் சமூகமும் அவருடன் இணைந்து கைகொடுத்தல் வேண்டும் – என்றார்.

# 17 எரிவாயு சிலிண்டர்களைத் திருடிய குழுவினர் கைது

(பாறுக் ஷிஹான்)



எரிவாயு சிலிண்டர்கள் உள்ளிட்ட நீர்ப்பம்பிகள் முதலானவற்றை திருடி விற்பனை செய்துவந்த திருடர் குழுவினரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளிலும் கடந்த சில நாட்களாக வீட்டுக்கூரையை பிரித்துக்கொண்டு உள்ளே இறங்கி எரிவாயு சிலிண்டர்கள் உள்ளிட்ட பொருட்களை களவாடி விற்பனை செய்துவந்த குழுவினரை கடந்த வெள்ளிக்கிழமை (3) மாலை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நிந்தவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எம்.நஜீம் தலைமையிலான சிறு குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான குணரட்ன, விசேட புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர் றிகான் குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையினால் களவாடப்பட்ட 17 எரிவாயு சிலிண்டர்கள், 05 நீர் இறைக்கும் கருவிகள், 01 சைக்கிள், 01 றோல் கோஸ், பைப் 01, சுவர் வெட்டும் இயந்திரம் என்பன மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது கைதான 21 மற்றும் 23 வயதுடைய சந்தேக நபர்கள் உட்பட திருடப்பட்ட பொருட்களைக் கொள்வனவு செய்ததாகக் கூறப்படும் 26 வயதுடைய சந்தேக நபரையும் சட்ட நடவடிக்கைக்காக நீதிமன்றத்தில ஆஜர்படுத்த நிந்தவூர் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.





உடப்புசல்லாவை, சென்மாக்ரெட் தோட்ட ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி தேவஸ்தான மகா கும்பாபிஷேகப் பெருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆலய பிரதம குரு குகபிரதிஸ்டாபதி சத்தியோஜாத சிவாச்சாரியார் சிவஸ்ரீ தவேந்திரன் குருக்கள் தலைமையில், சிவாகம சிரோன்மணி சிவஸ்ரீ தியாக சங்கராஜா சிவாச்சாரியாரின் நல்லாசியுடன் இடம்பெற்றது. (படப்பிடிப்பு: ஆ.ரமேஸ்)



# இலங்கையின் தற்போதைய நெருக்கடியும் 1971 நிலைவரமும்

இலங்கை அதன் 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடிக்கொண்டிருக்கின்ற இவ்வேளையில், ஆட்சிமுறை நிறுவனங்களுக்கு இடையிலான அதிகார வேறாக்கலை ஒழுங்குபடுத்தும் தடுப்புகள் மற்றும் சமப்படுத்தல்களினதும் (Checks and Balances) சட்டத்தின் ஆட்சியினதும் சீர்குலைவு குறித்து சிந்தித்துப் பார்க்கவேண்டியது முக்கியமானதாகும்.

1953, 1971, 1983ஆம் ஆண்டுகளின் நெருக்கடிகளாக இருந்தாலென்ன நீண்டகால உள்நாட்டுப் போர் மற்றும் தற்போதைய நெருக்கடியாக இருந்தாலென்ன அவற்றுக்காக பொறுப்புக்கூற வேண்டும் என்ற கடப்பாட்டு உணர்வு சுதந்திரத்துக்குப் பின்னர் நாட்டை ஆட்சிசெய்த மூன்று குடும்பங்களிடம் இருந்தும் வெளிப்பட்டதாக இல்லை. நல்லாட்சி, சமூக நீதி மற்றும் பொருளாதார முகாமைத்துவ தகுதி பற்றியும் அந்தக் குடும்பங்கள் அக்கறை காட்டவில்லை. பதிலாக, அவை மேலும் கூடுதலாக மத்தியமயப்படுத்தப்பட்ட பொறுப்புக்கூறலுக்கு அப்பாற்பட்ட அதிகாரத்தையே கோரியிருக்கின்றன.

தற்போது அர்த்தபுஷ்டியான அரசியல் மாற்றத்துக்கான கோரிக்கையை நசுக்குவதற்கு ராஜபக்ஷ குடும்பமும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களும் சேர்ந்து நிற்கிறார்கள். அதற்காக அவர்கள் கொடுமையான பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற சட்டங்களைப் பயன்படுத்துகிறார்கள்.

இந்தக் கட்டுரை 1971 ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) கிளர்ச்சிக்கும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கும் பின்னணியில் இருந்த பொருளாதார மற்றும் கட்டமைப்பு ரீதியான காரணங்களை ஆராய்கிறது.

தற்போதைய நெருக்கடியைப் போன்றே 1970களிலும் ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சி கண்டதுடன், வெளிநாட்டுக் கடன்களும் அதிகரித்தன.வேலையில்லாத் திண்டாட்டமும் தீவிரமடைந்தது.

1960களில் கைத்தொழில் துறையின் பருமன் வளர்ச்சியற்றதாக மந்தநிலையில் (12 --13 சதவீதம் ) காணப்பட்டது. பெரும்பான்மையான வருமானம் சேவைத் துறைகள் மற்றும் விவசாயத்தின் மூலமாகவே பெறப்பட்டன. ஏற்றுமதித் துறை அடிப்படையில் விவசாய உற்பத்திகள் மீதே தங்கியிருந்தது. நாடு கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டிருந்தது.

1957ஆம் ஆண்டில் 9 கோடியே 50 இலட்சம் ரூபாவாக இருந்த கடன் 1966ஆம் ஆண்டில் 34 கோடியே 90 இலட்சம் ரூபாவாகவும் 1969ஆம் ஆண்டில் 74 கோடியே 40 இலட்சம் ரூபாவாகவும் உயர்ந்தது. தற்போதைய நிலைவரத்தைப் போன்றே அன்றும் வெளிநாட்டுக் கடனை மீளச்செலுத்துவதற்கான பணத்தை வெளிநாட்டுக் கடனுதவிகள் மூலமாகவே பெறவேண்டியிருந்தது. நாட்டின் வெளிநாட்டு நாணய கையிருப்பும் வீழ்ச்சி கண்டது. இன்றுள்ளதைப் போன்றே இறக்குமதியின் பெரும்பகுதி உணவுப்பொருட்களாகவே (சுமார் 53 சதவீதம்) இருந்தது.

1971ஆம் ஆண்டில் வேலையில்லாத் திண்டாட்டம் தொடர்ந்து அதிகரித்தது. 44 இலட்சம் தொழிலாளர் படையில் 5,85,000 பேர் உத்தியோகபூர்வமாக வேலையில்லாதவர்களாக இருந்தனர். கலாநிதி என்.எம்.பெரேராவின் பொருளாதார நிர்வாகம் இதை 7 இலட்சம் என்று கணிப்பிட்டது.

வேலையில்லாத 5,85,000 பேரில் 4,60,000 பேர் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்களாகவும் 2,50,000 பேர் 19 - 24 வயதுடையோராகவும் இருந்தனர். 1,67,000 பேர் இரண்டாம் நிலைக் கல்வியைப் பெற்று மூன்றாம் நிலைக் கல்விக்குச் சென்றனர்.

அரசகரும பயனாளிகளான 1956ஆம் ஆண்டு தொடங்கிய யுகத்தின் சிறுவர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட பொருளாதார உறுதிமொழிகளின் பயனை அடையமுடியவில்லை. 1971 அரசாங்கத்தின் அடக்குமுறையின் விளைவாக 10,000 -- 15,000 சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டனர். இதை நாட்டின் ஆட்சியாளர்கள் ஒருபோதும் ஒத்துக்கொண்டதில்லை. பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர்.

61 குடிமக்களும் 63 ஆயுதப்படையினரும் உயிரிழந்ததாக அரசாங்கம் அறிவித்தது. ஆயுதப்படைகள் செய்த நீதி விசாரணைக்குப் புறம்பான கொலைகள் மற்றும் சித்திரவதைகள் குறித்து எந்தவித விசாரணைகளும் நடத்தப்படவில்லை. அத்தகைய கொடுமைகளைச் செய்தவர்கள் தண்டனைக்குள்ளாகாமல் இருக்கும் போக்கு வழமையானதாகியது.

கிளர்ச்சியின் தலைவர்கள் (அவர்களில் நானும் ஒருவன்) மீது வழக்கு தொடுக்கும் விடயத்தில் சட்டத்தின் ஆட்சி துவம்சம் செய்யப்பட்டது. ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்படும் நடைமுறை இரத்துச்செய்யப்பட்டு சித்திரவதை மூலம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் வழக்குகளில் அனுமதிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டபோதிலும், அது குறித்து ஒருபோதும் விசாரணை செய்யப்படவில்லை.

அடக்குமுறை கிரமமாக முன்னெடுக்கப்பட்டது. பொருளாதாரப் பிரச்சினைகளாக இருந்தாலென்ன அரசியல் மற்றும் நீதி நிர்வாகத்துடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளாக இருந்தாலென்ன எந்த கட்டமைப்பு ரீதியான பிரச்சினையையும் ஆராய்ந்து தீர்வு காண்பதில் நாட்டம் காட்டப்படவில்லை. முன்னெப்போதும் இல்லாத கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன. பொறுப்புக்கூறும் கடப்பாட்டை உறுதிசெய்வதில் அக்கறை காட்டப்படவில்லை. அரசால் இழைக்கப்பட்ட குற்றங்களை விசாரிப்பதில் தயக்கம் காட்டப்பட்டது.

1980களில் பொருளாதார திசைமார்க்கம் மாற்றமடைந்தது. நவதாராளவாதம் மந்திரமாகியது. நலன்புரி ஏற்பாடுகள் படிப்படியாக இல்லாமல் செய்யப்பட்டன. இலங்கை இப்போது உல்லாசப் பிரயாணத் துறை, ஆடை உற்பத்தி, வெளிநாட்டில் வேலைசெய்யும் இலங்கையர்கள் அனுப்புகின்ற பணம் மற்றும் தேயிலை ஏற்றுமதியில் தங்கியிருக்கிறது.

தேசிய கடன் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டேபோனது. ஆளும் குடும்பத்தவர்களின் தற்பெருமைக்காக முன்னெடுக்கப்பட்ட திட்டங்களுக்காக கோடிக்கணக்கான டொலர்கள் செலவிடப்பட்டன. யாருக்கு அவை தேவை, யார் அவற்றைப் பயன்படுத்தப் போகிறார்கள் என்பதைப் பற்றி எந்த யோசனையும் இல்லாமல் விமான நிலையங்கள், ஸ்ரேடியங்கள், அதிவேக நெடுஞ்சாலைகள், மாநாட்டு மண்டபங்கள் மற்றும் துறைமுகங்கள் நிர்மாணிக்கப்பட்டன.

2000ஆம் ஆண்டுகளில் கடன் நிகர உள்நாட்டு உற்பத்தியின் 79 சதவீதமாக உயர்ந்தது. அது தொடர்ந்து அதிகரித்துக்கொண்டு கொவிட் பெருந்தொற்று நாட்டைப் பாதிப்பதற்கு முன்னதாக 100 சதவீதத்தை எட்டியது. பொருளாதார உறுதிப்பாடின்மை மோசமாகியது. சனத்தொகையின் உயர்மட்டத்திலுள்ள 20 சதவீதத்தினரின் கைகளில் நாட்டின் வருமானத்தின் 42 சதவீதம் சென்றடைகின்ற அதேவேளை, சனத்தொகையின் கீழ்மட்டத்திலுள்ள 40 சதவீதத்தினரிடம் 17.8 சதவீத வருமானம் இருக்கிறது.

**ரணிலின் மீள் எழுச்சி**

2019 உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்களின் விளைவாக சுற்றுலாத்துறை வீழ்ச்சி கண்ட பிறகு பொருளாதாரத்தில் ஏற்பட்ட குறுக்கம் நாட்டின் வெளிநாட்டு நாணயக் கையிருப்புக்கு நெருக்குதல்களைக் கொடுத்தது. வரிகளைக் குறைப்புச் செய்ததன் மூலம் கோட்டாபய ராஜபக்ஷ நிலைவரத்தை மேலும் மோசமாக்கினார். அந்த வரிக்குறைப்பு நாட்டுக்கு பல நூறு கோடி ரூபா இழப்பை ஏற்படுத்தியது.

அடுத்து அவர் பசளை இறக்குமதியை தடைசெய்தார். பசளை வகைகளை இறக்குமதி செய்வதற்கு வெளிநாட்டு நாணயம் இல்லாதமையும் அந்த தடைவிதிப்புக்கு ஒரு காரணம். இதனால் விவசாய உற்பத்தியில் படுமோசமான வீழ்ச்சி ஏற்பட்டது. குறிப்பாக, முக்கியமான ஏற்றுமதி சம்பாத்தியத்தை தரும் தேயிலை, இறப்பர் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

பொருளாதாரம் தொடர்ந்து வீழ்ச்சி கண்டுவந்த நிலையில் உணவு வகைகள், எரிபொருட்கள், மருந்துவகைகள், சமையல் எரிவாயு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டது. சனத்தொகையில் உயர்மட்டத்திலுள்ள 20 சதவீதத்தினரால் நிலைமையை சமாளிக்கக்கூடியதாக இருந்த அதேவேளை, அதிகப் பெரும்பான்மையான மக்களுக்கு அன்றாட வாழ்க்கை பெரும் சுமையாகியது.

தன்னியல்பாக மூண்ட மக்கள் கிளர்ச்சி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலக நிர்ப்பந்தித்தது. அதையடுத்து நீண்டகாலமாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை அடையமுடியாமல் இருந்த ரணில் விக்கிரமசிங்கவை பாராளுமன்றம் ஜனாதிபதியாக தெரிவுசெய்தது.

போராட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தையை நடத்தி அவர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை கையாளுவதற்கு பதிலாக விக்கிரமசிங்கவின் அரசாங்கம் அரச அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டது. பொருளாதார முகாமைத்துவம் தெரியாதவர்களிடமும் அரசாங்கப் பணத்தைச் சூறையாடியவர்களிடமும் பொருளாதார மீட்டெடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளுக்கான பொறுப்பு மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருப்பதை காண்கிறோம்.

தவறான முகாமைத்துவம், ஊழல், பொருளாதார மற்றும் அரசியல் முறைமையில் பரவலாகக் காணப்படும் விரயம் ஆகியவையே இன்றைய நெருக்கடிகளுக்கு பிரதான காரணிகள். ஆனால், முன்வைக்கப்படும் தீர்வுகள் அந்த காரணிகளைக் கவனத்தில் எடுத்தவையாக இல்லை.

வரி செலுத்த இயலாத பிரிவினரே பெரும் பொறுப்பை சுமக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். கட்டமைப்பு ரீதியான பிரச்சினைகள் உரிய முறையில் கையாளப்படாவிட்டால் அது இன்னொரு பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு வழிவகுக்கும்.

இலங்கை அதன் 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்ற அதேவேளை, தற்போதைய நெருக்கடி எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்தும் எவ்வாறு அதை தீர்த்துவைப்பது என்பது குறித்தும் ஆழமாகச் சிந்திக்கவேண்டியது முக்கியமானதாகும். இல்லையேல் கடந்த காலத்துக்குள் மீண்டும் வாழ நாம் நிர்ப்பந்திக்கப்படுவோம்.

முறைமை மாற்றத்தைச் செய்யத் தவறினால் தனிப்பட்ட முறையிலும் பொருளாதார மட்டத்திலும் மாபேரளவு இழப்புகளை சந்திக்கவேண்டியிருக்கும் என்பதை 1971, 2020ஆம் ஆண்டுகள் எமக்கு நினைவூட்டுகின்றன. முறைமை மாற்றத்தைச் செய்வதே 1971ஆம் ஆண்டில் அநியாயமாக தடுத்துவைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கும் அரசின் கைகளில் பலியான பெயர் தெரியாத ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கும் எம்மால் செய்யக்கூடிய நீதியாகும்.



கலாநிதி லயனல் போபகே








சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிறிஸ்தவ பாதிரியார்கள் மருதானையில் நேற்று முன்தினம் (04) அமைதி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். (படங்கள்: சமன் அபேசிறிவர்தன)






75ஆவது சுதந்திர தினத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று முன்தினம் (04) யாழில் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.











'சுதந்திரம் எங்கே' எனும் தொனிப்பொருளில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைமையில் சிவில் அமைப்பினர் ஏற்பாடு செய்திருந்த போராட்டம் மற்றும் பேரணி ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் (04) முன்னெடுக்கப்பட்டது. (படங்கள்: சமன் அபேசிறிவர்தன)

# நோய்க்கு வலி நிவாரணிகளை வழங்க நான் முயற்சிக்கவில்லை; நோய்க்கான மூலகாரணியை நிவர்த்திசெய்யவே முனைகிறேன்!

## சுதந்திர தினத்தில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



''ஒற்றையாட்சி அரசில் அதிகபட்ச அதிகாரப் பகிர்வுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு நாம் அனுமதிக்க மாட்டோம். நான் முயற்சிப்பது மேலோட்டமாக தெரிகின்ற நோய்க்கு வலி நிவாரணிகளை வழங்க அல்ல. நோயின் மூலகாரணியை நிவர்த்திசெய்யவே முயற்சிக்கிறேன். அது சிரமமானது. நாம் செல்ல வேண்டிய ஒரே வழி அதுதான். சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் மனதிற்கொண்டு ஒற்றுமையுடன் திட்டமிட்டு முன்னேறினால் 2048ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றலாம்'' – என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சுதந்திர தினத்தில் மக்களுக்கு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றிருக்கும் பொருளாதார நெருக்கடியின் தீவிரத்தையும் ஆபத்தையும் இதற்கு முன்னரும் நான் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக் காட்டியிருக்கிறேன். இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்கள் மிகவும் கடினமாக இருக்கும் என்று நான் முன்கூட்டியே கூறியுள்ளேன். இந்த இக்கட்டான சூழலை நாம் விருப்பமில்லாத நிலையிலும் கூட எதிர்கொள்ளவேண்டியுள்ளது. நாட்டின் நலனுக்காக நாம் இந்த இக்கட்டான நிலையை தாங்கிக்கொள்ள வேண்டியுள்ளது. அரசியல் இனிப்புப் பேச்சுகளால் இந்நிலைக்குத் தீர்வு கிடைக்காது.

இலவசக் கல்வியால் இந்நாட்டில் பெருமளவிலான மக்கள் வறுமையிலிருந்து விடுபட்டு நடுத்தர வர்க்கத்தினராக மாறினாலும் இன்று அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாத நாடாக மாறியுள்ளது. தோளோடு தோள் நின்று உழைக்கவேண்டிய இளைஞர்கள் இன்று கடவுச்சீட்டுகளைப் பெற வரிசையில் நின்றுகொண்டிருப்பதை நான் பார்க்கிறேன். அதை நாம் மாற்ற வேண்டும்.

அப்படியானால், நாம் இந்தப் பொருளாதாரத்தை நவீனமயமாக்கி, உலகிற்கு திறந்துவிட வேண்டும். மக்களை ஏமாற்றி அவர்களை நிரந்தர ஏழைகளாகவும், தங்கிவாழ்பவர்களாகவும் மாற்றும் ஊழல் அரசியல்வாதத்தையும் தோற்கடிக்க வேண்டும். இந்நாட்டு இளைஞர்கள் நீண்டகாலமாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் "சிஸ்டம் சேன்ஞ்" என்ற முறைமை மாற்றம் இதுதான்.

அதற்காக எனது அரசாங்கம் புதிய சீர்திருத்தப் பாதையில் பிரவேசித்துள்ளது. அதற்காக எடுக்கப்படும் முடிவுகள் சிலநேரம் வேதனைத் தருவதாக இருந்தாலும், இந்த நெருக்கடியில் இருந்து வெளிவர அந்த வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

இந்த நெருக்கடியை வெற்றிகொள்ள வேண்டுமாயின், நாம் குறுகிய அரசியலிலிருந்து விலகிச்செல்ல வேண்டும். நாம் ஒரு தாயின் பிள்ளைகளாக ஒற்றுமையாக இந்த சவாலை எதிர்கொள்ள வேண்டும். சவாலை வெற்றிகொள்ளும் பாதையை வலுப்படுத்த நம்மால் முடிந்தளவு பங்களிக்க வேண்டும். அனைத்து வேற்றுமைகளையும் புறந்தள்ளிவிட்டு இலங்கையர்களாக நாம் அனைவரும் முன்னேறிச் செல்ல வேண்டும்.

அதன்மூலம் வலுவான புதிய பொருளாதாரம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அதற்கான அடிப்படைப் பணிகளும், அடித்தளமும் தற்போது தயார்படுத்தப்பட்டுள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதற்குத் தேவையான கடினமான பணிகளை நாங்கள் வெற்றிகரமாகச் செய்து வருகிறோம். விரைவில் அவர்களின் இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

பொருளாதாரத்தை வலுப்படுத்துவதால் மட்டும் எம்மால் திருப்தியடைய முடியாது. ஒட்டுமொத்தக் கட்டமைப்பிலும் நாம் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இந்த அரசியல் முறைமை, பாராளுமன்றம், நிறைவேற்று அதிகாரம், அரச பொறிமுறை ஆகிய அனைத்து துறைகளும் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றப்பட வேண்டும்.

இந்த மாற்றம் நாட்டுக்கும் நமக்கும் நல்லதாக அமைய வேண்டும். புதிய முறைமையில் இளைஞர்கள் மற்றும் பெண்களின் கருத்துகளுக்கும் பிரதிநிதித்துவங்களுக்கும் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

இந்த முறைமை மாற்றத்துக்கு அவசியமான பல்வேறு சட்ட ஏற்பாடுகளை நாம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளோம்.

அதுபோன்றே வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் விசேடமான பிரச்சினைகள் தொடர்பில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதற்கான அமைச்சரவை உபகுழுவை ஏற்கனவே நியமித்துள்ளோம்.

அங்கு எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தப்படும் காலப்பகுதி, அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அறிவிக்கப்படும். அவர்களது கருத்துகளின்படி, அந்தப் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படும்.

காணிகளை மீளக் கையளித்தல், கைதிகளை விடுதலை செய்தல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கு நாம் முன்னுரிமை அளித்துள்ளோம்.

அதுபோன்றே ஒற்றையாட்சி அரசில், அதிகபட்ச அதிகாரப்பகிர்வுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

நான் முயற்சிப்பது மேலோட்டமாக தெரிகின்ற நோய்க்கு வலி நிவாரணிகளை வழங்க அல்ல. நோயின் மூலகாரணியை நிவர்த்திசெய்யவே முயற்சிக்கிறேன். அது சிரமமானது. மிகவும் கடினமானது. எனினும் நாம் செல்லவேண்டிய ஒரே வழி அதுதான்.

நான் ஜனாதிபதியாக பதவியேற்றதிலிருந்து எனக்கு எடுக்க நேரிட்ட பல தீர்மானங்கள் பிரசித்தமான தீர்மானங்கள் அல்ல என்பதை நான் அறிவேன். ஆனால், அந்தத் தீர்மானங்களால், இன்று இந்த நாட்டின் எந்தக் குடிமகனும் எரிபொருள் வரிசைகளில் நீரின்றி இறக்கவில்லை. சமையல் எரிவாயு இல்லாமல் பட்டினியில் இல்லை. உரம் இல்லாமல் சாபம் இடவில்லை.

எனவே, அராஜக அரசியல் சக்திகள் எத்தகைய தடைகளை ஏற்படுத்தினாலும், இந்த நாட்டை நேசிக்கும் பெரும்பான்மையான மக்களுடன் இணைந்து இந்தப் புதிய சீர்திருத்தத் திட்டத்தை முன்னெடுப்பேன். சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் மனதிற்கொண்டு ஒற்றுமையுடன் திட்டமிட்டு முன்னேறினால் 2048ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியடைந்த நாடாக மாறலாம் - என்றார்.

## 3 கோடி ரூபா பெறுமதியான மூன்று தங்க புத்தர் சிலைகளை விற்க முயற்சி

### தந்தையும் மகனும் தம்புள்ளையில் கைது

புதையலிலிருந்து எடுக்கப்பட்ட புத்தர் சிலைகள் எனக் கூறி ஒன்றரை கோடி ரூபாவிற்கு மூன்று தங்கச் சிலைகளை விற்பனைசெய்த தந்தையும் மகனும் கைது செய்யப்பட்டுள்ளதாக தம்புள்ளை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கலேவெல புதுகேஹின்ன பகுதியைச் சேர்ந்த தந்தையும் மகனும் கைதுசெய்யப் பட்டுள்ளதுடன், புத்தர் சிலைகளை ஏற்றிச்சென்ற முச்சக்கரவண்டியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

தம்புள்ளை பொலிஸ் விசேட பணியகத்திற்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, தம்புள்ளை பொலிஸ் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட, கொள்வனவுசெய்பவர்கள்போன்று மாறுவேடமிட்ட பொலிஸ் குழுவினர் முன்னர் இந்த புத்தர் சிலைகளை கைதுசெய்துள்ளனர்.



சுமார் ஒன்றரை கோடி ரூபா பெறுமதியான இந்த 3 புத்தர் சிலைகளை கொள்வனவு செய்பவர்கள்போல் மாறு வேடமிட்ட பொலிஸ் அதிகாரிகள் மூன்று நாட்களாக பேரம்பேசி விலையை குறைக்க கடுமையாக முயற்சித்தனர்.

அதன்படி புத்தர் சிலையுடன் தம்புள்ளைக்கு வந்த சந்தேக நபர்கள் இருவரையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

## போயா தினத்தில் கசிப்பு விற்பனை; தேசிய வைத்தியசாலை ஊழியர் கைது

போயா தினத்தில் வீட்டில் கசிப்பு விற்பனை செய்துகொண்டிருந்த கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சிற்றூழியர் ஒருவர் 20 கசிப்பு போத்தல்களுடன் கைதுசெய்யப்பட்டதாக புலத்சிங்கள பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

புலத்சிங்கள, கோவின்ன, பஹல நாரகல பிரதேசத்தை வசிப்பிடமாகக்கொண்ட இவர், புலத்சிங்கள மற்றும் மஹரகம வைத்தியசாலைகளில் சிற்றூழியராக கடமையாற்றியவர் என்பதுடன், தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிற்றூழியராக கடமையாற்றி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

54 வயதுடைய குறித்த சந்தேக நபர் நீண்டகாலமாக வீட்டில் கசிப்பு விற்பனை செய்து வந்துள்ளதுடன், பல தடவைகள் கைதுசெய்யப்பட்டுள்ளார். அத்துடன், இதற்கு முன்னரும் பல குற்றங்களைச் செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டின் நான்கு பக்கங்களிலும் கண்காணிப்பு கெமராக்கள் பொருத்தப்பட்டு மிகவும் திட்டமிட்டு கவனமாக கசிப்பு விற்பனை நடைபெற்று வருவது தெரியவந்துள்ளது.

விற்பனைக்குத் தயாராக இருந்த கசிப்பு போத்தல்கள் வீட்டின் பின்புறம் உள்ள பெரிய பீப்பாய்க்குள் மறைத்துவைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் இன்று (6) மத்துகம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

## யாழ். ஆரியகுளம் ஸ்ரீ நாக விகாரையில் பொலிஸாரால் இரத்த தானம் வழங்கிவைப்பு



யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் இரத்த தட்டுப்பாடு நிலவுவதாக அண்மையில் செய்திகள் வெளியான நிலையில், ஆரியகுளம் ஸ்ரீ நாகவிகாரையின் விகாரதிபதி ஸ்ரீவிமல தேரரின் ஏற்பாட்டில் நேற்று (05) ஏற்பாடு செய்யப்பட்ட இரத்த தான முகாமில் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலர் இரத்த தானம் வழங்கினர்.

குறித்த இரத்த தான நிகழ்வில் வடமாகாண மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர், யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு இரத்த தானம் வழங்கினர்.

## மகன் மீதுள்ள கோபத்தால் தாயை கடத்திக் கொலை

### எம்பிலிபிட்டியவில் சம்பவம்

எம்பிலிபிட்டியவில் பெண்ணொருவரை கடத்திச்சென்று கொலைசெய்து சடலத்தை எம்பிலிபிட்டிய ஆயுர்வேத வைத்தியசாலைக்கு அருகில் விட்டுச் சென்றுள்ளதாக எம்பிலிபிட்டிய தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சூரியவெவ பிரதேசத்தில் வசிக்கும் சூரியவெவ வீரியகமவில் வசித்துவந்த 58 வயதுடைய தெமட்டகொடகமகே மல்காந்தி என்ற பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ஹோட்டல் ஒன்றின் உரிமையாளர் உள்ளிட்ட மூவரால் கடத்திச்செல்லப்பட்டு குறித்த பெண் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ளதாகவும் எம்பிலிபிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

ஹோட்டல் உரிமையாளரின் மனைவிக்கும் கொலைசெய்யப்பட்ட பெண்ணின் மகனுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறே இந்தக் கொலைக்குக் காரணம் என பொலிஸ் வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் எம்பிலிபிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றின் உரிமையாளரான வர்த்தகர் உட்பட மூவரை கைதுசெய்ய தேடப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## உலர் கஞ்சாவுடன் மூன்று பேர் கைது

(கெலும் குணதிலக்க)

மெதகம, தனமல்வில மற்றும் ஹம்பேகமுவ பொலிஸ் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 2 கிலோ 700 கிராம் உலர் கஞ்சாவை வைத்திருந்த மூவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மெதகம மல்லேஹவ பிரதேசத்தில் 01 கிலோ உலர் கஞ்சாவை வைத்திருந்த 31 வயதுடைய சந்தேக நபர், 802 கிராம் உலர் கஞ்சாவுடன் தனமல்வில பரண பலஹருபர உவக்குடாஓய பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய நபர் மற்றும் 900 கிராம் உலர் கஞ்சா வைத்திருந்த ஹம்பேகமுவ, அலுத்வெவ பகுதியைச் சேர்ந்த 44 வயதான ஒருவருடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களை பிபில மற்றும் வெல்லவாய நீதவான் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## பராக்கிரம சமுத்திரத்தின் 10 வான்கதவுகள் திறப்பு



நாட்டில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக பொலன்னறுவை பராக்கிரம சமுத்திரம் நிரம்ப ஆரம்பித்துள்ளதாக நீர்ப்பாசன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதிகபட்ச கொள்ளளவான ஒரு இலட்சத்து பதினாறாயிரம் ஏக்கர் அடிக்கு நீர்மட்டம் உயர்ந்ததையடுத்து, நீர்த்தேக்கத்தின் 10 வான் கதவுகள் தலா 01 அடி வீதம் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வினாடிக்கு 1400 கன அடி நீர் வெளியேறுவதாக பராக்கிரம சமுத்திர நீர்பாசனப் பொறியியலாளர் அஞ்சன அபேசிங்க தெரிவித்தார்.

கழிவுநீர் அம்பங்கங்கை ஊடாக மகாவலி ஆற்றில் சேரும் என அவர் தெரிவித்துள்ளார்.



மலேசிய உயர் ஸ்தானிகர் பத்லி ஹிஸாம் ஆதமை கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தினர் சிநேகபூர்வமாக கண்டி ராத் ஹோட்டலில் சந்தித்தனர். (இக்பால் அலி)

## 254 லீற்றர் கோடாவுடன் இருவர் கைது

(கெலும் குணதிலக்க)

தனமல்வில மற்றும் மெதகம பகுதியில் 254.5 லீற்றர் கோடாவுடன் சந்தேக நபர்கள் இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தனமல்வில மற்றும் மெதகம பொலிஸ் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 250 லீற்றர் கோடாவுடன் தனமல்வில காமினிபுர பகுதியைச் சேர்ந்த 79 வயதுடைய நபரொருவரும், மெதகம பிடகும்புர பகுதியில் 4.5 லீற்றர் கோடா வைத்திருந்த 35 வயதுடைய நபரொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை வெல்லவாய மற்றும் பிபில நீதவான் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.




**Senior Supervisor – Production**

**Company: Pelwatte Dairy Industries Limited**
**Qualification: Bachelor's Degree or Diploma from an accredited institute or university in a related field.**
***Email: careers@pelwattedairy.com***

**Senior Consultant, Senior Business Analyst, Strategic Communications Consultants and Trainer**

**Company: Deloitte Consulting Overseas Project LLC**
***Email: partner.activity@partnersl.lk***

**Reservation Executives**

**Company: Booker Recreation PVT Ltd**
**Qualification: At least 3-5 years' experience, Team leader spirit, Willingness to work late and long hours.**
***Email: booker@bookerglobal.com***

**Project Co-ordinator**

**Institution: IOM – UN Migration**
***Email: https://srilanka.iom.int/careers***

**Sales Officers**

**Company: Global Vinyl PVT Ltd**
***Email: careers@globalvinyl.lk***

**Administrator**

**School: Zahira College, Colombo**
***Web: www.zahiracollege.lk***

**Post of Peon**

**Institution: High Commission of India, Colombo**
***Email: admn2.colombo@mea.gov.in***

# இலங்கையின் 75ஆவது சுதந்திர தின நிகழ்வுகள்





இலங்கையின் 75ஆவது தேசிய சுதந்திர தின விழா கொழும்பு காலிமுகத்திடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது. (படப்பிடிப்பு: லலித் பெரேரா, பிரதீப் தம்பரகே)













யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்திலும் யாழ்.நகரிலும் (படப்பிடிப்பு: யாழ். செய்தியாளர்)





கண்டி கட்டுகலை ஜும்ஆப் பள்ளிவாசலில் (படப்பிடிப்பு: இக்பால் அலி)






மன்னார் மாவட்ட செயலகத்தில் (படப்பிடிப்பு: மன்னார் நகர் செய்தியாளர்)






வவுனியா நகரசபை மைதானத்தில் (படப்பிடிப்பு: வவுனியா செய்தியாளர்)

# உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டால் வெளியக சுயநிர்ணய தீர்வை நோக்கி பயணிப்பதற்கும் தயார்!

**மட்டக்களப்பில் சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு**









(கே.கிருபாகரன்)

உள்ளக சுயநிர்ணய உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டால் வெளியக சுயநிர்ணய தீர்வை நோக்கி பயணிப்பதற்கும் தயார் - என பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

''தமிழர்களுக்கு இருள் நாள் பெப்ரவரி நான்கு'' எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் சனிக்கிழமை (04) ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“பிரித்தானியர்கள் தமிழர்களின் தலையெழுத்தை சிங்களவர்களிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றதால்தான் இன்று பாரிய நெருக்கடிகளை நாம் சந்தித்துள்ளோம். வெறுமனே பேசிக் கொண்டிருக்காமல் எமக்கான உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக செயலில் இறங்கவேண்டிய காலம் அண்மித்துள்ளது. நாட்டில் இருந்த தமிழ் அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகளை இந்த பெரும்பான்மை அரசாங்கமே தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந்து நாட்டைவிட்டு வெளியேற்றியது என்பதே உண்மையாகும்.

ஆனால், தற்போது தென்னிலங்கையிலிருந்து பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்கள் வெளியேறுவது குறித்து குரல் கொடுக்கின்றனர். அவர்களுக்கு பொருளாதாரச் சுதந்திரம் மட்டுமே தற்போது மறுக்கப்பட்டிருக்கின்றது. தமிழர்களுக்கு தொடர்ந்தும் பொருளாதார அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டன. மறுக்கப்பட்டும் வருகின்றன.

நாட்டுக்கு பெரும் அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரும் மலையக மக்களுக்கும் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. நாட்டிலிருந்து அடித்து விரட்டப்பட்டு குடியுரிமை பறிக்கப்பட்டபோதிலும் இன்றுவரை நாட்டுக்கு மிகப் பாரியளவில் அந்நியச் செலாவணியை மலையக மக்கள் பெற்றுக்கொடுத்துள்ளனர். அத்துடன், கிழக்கின் தமிழர்களுக்குச் சொந்தமான காணிகள் பல தற்போது பெரும்பான்மையினத்தவர்களுக்கு பறித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

போராட்டத்தின் வடிவங்கள் மாறினாலும் எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு அரசியல் ரீதியிலான போராட்டத்தை தமிழரசுக் கட்சி ஆரம்பித்திருக்கின்றது. இதற்கு கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் உள்ளிட்ட அனைவரும் இணைந்து பயணிக்க வேண்டிய தேவை தற்போது எழுந்துள்ளது. எமக்கான இலக்கை எப்போதும் மாற்றப்பேவதில்லை. தொடர்ந்தும் எமது இலக்கை அடைவதற்கான வழிகளில் பயணிப்போம். தமிழர்கள் இன்று இழந்துள்ள அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகளை வென்றெடுப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டிய தேவை எமக்குள்ளது.

அதற்கான அனைத்து முயற்சிகளையும் தமிழரசுக் கட்சி முன்னெடுத்துச் செல்லும் என்பதை நாம் உறுதியுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கான மாற்றுப் பாதையில் தமிழரசுக் கட்சி தொடர்ந்தும் பயணிக்கும். வெறுமனே நாம் பேசிக்கொண்டிருக்காமல் இந்த ஆண்டின் இறுதிக்குள் எமக்கான உரிமைகளை வென்றெடுப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்” - என்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கிழக்கில் இடம்பெற்ற 75ஆவது சுதந்திர தின நிகழ்வுகள்



கல்முனை மாநகர சபை



ஒட்டமாவடி ஏவிசன் கல்குடா அமைப்பு



மட்டக்களப்பு மாவட்ட செயலகம்



ஒட்டமாவடி பிரதேச செயலகம்



திருகோணமலை மாவட்ட செயலகம்



அட்டாளைச்சேனை பிரதேச செயலகம்



அம்பாறை



கல்முனை பிரதேச செயலகம்

மருதமுனை, சீனக்குடா, கல்முனை, கல்குடா, மட்டக்களப்பு, கிண்ணியா, திராய்க்கேணி, ஏறாவூர், பெரியநீலாவணை, பாலமுனை, காரைதீவு நிருபர்கள்.



கந்தளாய் அல்தாரிக் ஜுனியர் வித்தியாலயம்



ஏறாவூர் நகர சபை





பாலமுனை மஹாசினுல் உலூம் இஸ்லாமிய கல்லூரி



ஆலையடிவேம்பு பிரதேச செயலகம்



காரைதீவு இராமகிருஸ்ண மிசன் பெண்கள் பாடசாலை



களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையம்



ஏறாவூர் 2 கிராமிய அபிவிருத்திச் சங்கம்

தம்பலகாமம் பிரதேச செயலகம்



# கஞ்சாவுடன் இருவர் கைது

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நகர்ப் பிரிவு மற்றும் ஹிஜ்ரா வீதி ஆகிய பிரதேசங்களில் கஞ்சாவுடன் இருவர் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட இரகசியத் தகவலின்படி, பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம்.சதாத் தலைமையில் பொலிஸ் சார்ஜன்ட்களான தாஹீர், அனஸ் ஆகியோர் குறித்த பிரதேசத்திற்கு சென்று சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளதுடன் அவர்களிடமிருந்த கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட ஒரு நபரிடமிருந்து 550 மில்லி கிராம் கஞ்சாவும் மற்றைய நபரிடமிருந்து 570 மில்லி கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை (03) ஆஜர்படுத்தியபோது பெப்ரவரி 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

# கஜமுத்துகளை இரகசியமாக விற்பனைசெய்ய முயற்சித்த இளைஞன் கைது



(பாறுக் ஷிஹான்)

யானை கஜமுத்துகளை இரகசியமாக விற்பனைசெய்ய முயன்ற இளைஞனை திருக்கோவில் விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், கல்முனை புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை (03) இரவு சந்தேகத்திற்கிடமாக இளைஞன் ஒருவர் நடமாடுவதாக இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றினையடுத்து, திருக்கோவில் விசேட அதிரடிப்படையினர் குறித்த இளைஞனை கைதுசெய்துள்ளனர்.

இதன்போது கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து சுமார் 4 யானை தந்தத்துக்குள் இருக்கின்ற கஜமுத்துகள் விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டுள்ளன. குறித்த கஜமுத்துகளை தன்வசம் வைத்திருந்தாரென கைதுசெய்யப்பட்ட இளைஞன், 29 வயது மதிக்கத்தக்கவர் எனவும் திருகோணமலை கந்தளாய் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

மேலும், கைதுசெய்யப்பட்ட இளைஞன் உட்பட சான்றுப்பொருட்கள் யாவும் சம்மாந்துறை பகுதியிலுள்ள வனஜீவராசிகள் திணைக்களப் பிரிவிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கஞ்சாத்தோட்டம் கைப்பற்றி அழிப்பு




(பாறுக் ஷிஹான்)

அம்பாறை பக்மிட்டியாவ வனப்பகுதியில் ஒரு ஏக்கரில் கஞ்சா பயிரிடப்பட்டு வந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை (03) மாலை கைப்பற்றப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய, இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் அருகம்பை விசேட அதிரடிப்படையினர் இணைந்து நடத்திய தேடுதலில் பக்மிட்டியாவ வனப்பகுதியில் பயிரிடப்பட்ட சுமார் 7,500 கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவை ஒவ்வொன்றும் சுமார் 3-6 அடி உயரம் வரை வளர்ந்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சா செடிகள் அனைத்தும் பாதுகாப்புத் தரப்பினரால் அழிக்கப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளை தமண பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# நடனம் பயிற்றுவித்தல் ஆரம்பம்

(மண்முனை செய்தியாளர்)

இந்து மக்களின் புனித நாட்களில் ஒன்றான தைப்பூசம் நாளில் மக்கள் நற்காரியங்களை செய்வது வழமை. இத்தைப்பூசம் எனும் புனித நாளில் மட்டக்களப்பு, முகத்துவாரம் நர்த்தன பவன நாட்டியாலயத்தில் நடனம் பயில்வதற்காக வந்த புதிய மாணவர்களுக்கு நடனம் பயிற்றுவிக்கும் ஆரம்ப நிகழ்வு நேற்று (05) இடம்பெற்றது.



இதன்போது இங்கு புதிதாக வருகை தந்த மாணவர்களை நர்த்தன பவன நாட்டியாலய குரு திருமதி ஷர்மிலதா பிரபாகரன் ஆசிர்வாதம் வழங்கி நடனத்தைப் பயிற்றுவித்தார்.

# ‘சுதந்திர தினம் கறுப்பு நாள்’ திருமலையில் எதிர்ப்பு நடவடிக்கை




(அப்துல்சலாம் யாசீம்)

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்பட்ட நிலையில் திருகோணமலை சிவில் சமூக ஆர்வலர்கள், திருகோணமலை தமிழர் பேரவை, வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் ஆகியோர் இணைந்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

மேலும், சுதந்திர தினத்தை கறுப்பு நாளாக தாம் கருதுவதாகவும் தெரிவித்தே அவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

திருகோணமலை மகேஷர் விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக கடந்த 04ஆம் திகதி காலை பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள், ‘‘எங்களை அடிமையாக்காதே, நாங்கள் தமிழர்கள்; இலங்கையின் பிரஜைகளே, தமிழர்களுக்கான சுதந்திரம் இன்னும் இல்லை, தமிழர்களுக்கான உரிய தீர்வுகளை கொடுக்க இனியும் தாமதிக்காதே’’ போன்ற பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த திருவண்ணாமலை தமிழர் பேரவையின் தலைவர் ஜெரோம், இலங்கையின் 75ஆவது சுதந்திர தினம் மிகவும் விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகின்ற நிலையில், வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற தமிழர்களாகிய நாங்கள் சுதந்திர தினத்தில் பங்கு பெறாமல் இருக்கின்றோம். அதற்கான காரணம் அரசாங்கத்திற்கு நன்றாகவே தெரியும். 75 வருடங்களாக தமிழர்களின் பிரச்சினையை இழுத்தடித்துக்கொண்டே




வருகின்றனர். இந்த நேரத்தில் நாங்கள் தாழ்மையாக கேட்டுக் கொள்வதே தமிழர்களின் பிரச்சினையை தீர்த்து இலங்கை அரசாங்கமும் சர்வதேசமும் இனிவரும் காலங்களிலாவது சுதந்திர தினத்தில் பங்கேற்க வையுங்கள் - என்றார்.

மேலும் இதன்போது, தமது பிள்ளைகள் காணாமலாக்கப்பட்டிருந்தபோதிலும் தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்பது பற்றி அரசாங்கம் இன்னும் கூறவில்லை. இன்றைய சுதந்திர தினத்தை தாங்கள் ஒரு கறுப்பு நாளாக கருதுகின்றோம் என வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி செபஸ்டியன் தேவி தெரிவித்தார்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



**முந்தநாள் இலங்கைக்கு 75ஆவது சுதந்திர தினம் எண்டு கொழும்பு காலிமுகத்திடலில நடந்த நரிட விழாவுல பல சிங்கள தலைவர்கள காணல்ல எலுவா? ஆனா வடக்கு கிழக்கில தமிழ் கட்சிகள் கரிநாளாக பல இடங்களில நடத்தின எதிர்புகள பாத்தா இந்த சுதந்திர நாள் இந்த வருஷம் கள கட்டினமாதிரி இல்ல அது சரி இஷ்லாமிய அரசியல் வாதிகள், இஷ்லாமிய மக்கள் எதிர்ப்பும் காட்டாம.. ஆதரவும் காட்டாம கழுவுற மீனில நழுவுற மீன்மாதிரி எலுவா இந்த தடவ இருந்தாங்க.. எல்லாம் அல்லாவுக்குத்தான் வெளிச்சம்.**

# சுதந்திர தினத்துக்கு எதிரான கண்டன ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பில்




(கனகராசா சரவணன்)

‘‘பெப்ரவரி 4 தமிழர்களின் கரிநாள்; ஒற்றையாட்சியையும் 13ஆவது திருத்தச் சட்டத்தையும் முற்றாக நிராகரிப்போம்’’ எனக் கோரி மட்டு நகரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலம் மட்டக்களப்பு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் சனிக்கிழமை 4ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முன்னணியின் அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தலைமையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலம் காலை 10 மணிக்கு காந்திபூங்காவின் முன்னால் ஆரம்பிக்கப்பட்டு நகர் மணிக்கூட்டு கோபுரம் வரை சென்று அங்கிருந்து பிரதான பஸ் தரிப்பிடம் வரை சென்றது.

இதன்போது, கலந்து கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் கறுப்புப்பட்டி அணிந்தவாறு ‘‘பெப்ரவரி 4 தமிழர்களின் கரிநாள், ஒற்றையாட்சியையும் 13ஆம் திருத்தத்தையும் முற்றாக நிராகரிப்போம், சர்வதேசமே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை பெற்றுக் கொடு, தமிழினப் படுகொலைக்கான சர்வதேச நீதி விசாரணையை நடத்து, சர்வதேசமே ஸ்ரீலங்காவை குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்து, அரசியல் கைதிகளை உடனடியாக நிபந்தனையின்றி விடுதலை செய், பயங்கரவாத சட்டத்தை உடன் நீக்கு, ஸ்ரீலங்கா அரசே தமிழர் தாயகத்தில் நில அபகரிப்பை உடன் நிறுத்து, தமிழர் தாயகத்தின் வரலாற்று தொல்லியல் சான்றுகளை அழிக்காதே, தொடரும் இன அழிப்பை உடன் நிறுத்து, எங்கே எங்கே எங்கள் குழந்தைகள் எங்கே, ஐ.நாவே நாம் அழுவது உமக்கு கேட்கவில்லையா?, முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை மறக்கமாட்டோம், குடும்பம் குடும்பமாக ஒப்படைக்கப்பட்ட சின்னஞ்சிறார்கள் எங்கே’’ போன்ற சுலோகங்களை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் முற்பகல் 11.30 மணிவரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வார்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், கட்சி ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டிருந்தனர்.



காரைதீவு இந்துசமய விருத்திச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த தைப்பூச விழா நேற்று (05) காலை இடம்பெற்றது. ஆலயத்துக்கு சொந்தமான வயலுக்கு சென்று நெல் அறுவடை செய்யப்பட்டு எடுத்துச் செல்லப்படுவதை படங்களில் காணலாம். (காரைதீவு செய்தியாளர்)

# முரண்பாடு கைகலப்பாகியதில் மூவர் வைத்தியசாலையில்

(மீராவோடை செய்தியாளர்)

போதைப்பொருள் பாவனையில் ஈடுபடும் நபருக்கும் அதனை தடுக்க முயற்சி செய்த நபருக்குமிடையில் ஏற்பட்ட முரண்பாடு கைகலப்பாகியதில் மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துரைச்சேனை பகுதியில் வைத்தே இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை (03) இடம்பெற்றுள்ளது.

இதில், போதைப்பொருள் பாவனையாளர் நபரொருவர் மீது கத்தியால் தலைப்பகுதியில் குத்தியுள்ளதுடன், கத்திக்குத்துக்குள்ளான நபரின் தாயாரும், உறவினரான பத்து வயது சிறுவன் ஒருவனும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர். இவ்வாறு காயமடைந்த தாயும், மகனும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், சம்பவத்தில் காயமடைந்த சிறுவன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 4500 மில்லி கிராம் கஞ்சாவுடன் கைதான இருவருக்கு விளக்கமறியல்

(கோணாவத்தை செய்தியாளர்)

திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாண்டியடி, காஞ்சிரங்குடா ஆகிய பிரதேசங்களில் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட இரகசியத் தகவலின்படி, குறித்த பிரதேசத்திற்கு சென்ற பொலிஸார் சந்தேக நபர்களை கைது செய்துள்ளதுடன் அவர்களிடமிருந்த கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர்.

தாண்டியடி பகுதியில் கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 2500 மில்லி கிராம் கஞ்சாவும் மற்றைய நபரிடமிருந்து 2000 மில்லி கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் சனிக்கிழமை (04)ஆஜர்படுத்தியபோது அவர்களை 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# போதையை ஒழிக்க கையெழுத்து சேகரிப்பு



(மீராவோடை செய்தியாளர்)

மட்டக்களப்பு - கல்குடா தொகுதியில் அதிகரித்து வரும் போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனைகளை தடுக்க பல்வேறு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்தொடரில், போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனைகளை சட்ட ரீதியாக தடுப்பதற்காக கல்குடா தொகுதியிலுள்ள பள்ளிவாசல்களில் கையெழுத்து சேகரிக்கும் திட்டம் வெள்ளிக்கிழமை (03) ஜும்ஆப் தொழுகையின் பின்னர் மேற்கொள்ளப்பட்டது. இதில், பெருமளவான பொதுமக்கள் போதைப்பொருளுக்கு எதிரான தமது எதிர்ப்புகளை தெரிவித்து கையொப்பங்களை இட்டனர்.

# சுதந்திர தினத்தை முன்னிட்டு ஏழு சிறைக் கைதிகள் விடுதலை



(கந்தளாய் செய்தியாளர்)

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தினை முன்னிட்டு திருகோணமலை சிறைச்சாலையிலிருந்து ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் சிறு குற்றங்கள் புரிந்த 7 கைதிகள் சனிக்கிழமை (04) விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தண்டப்பணம் செலுத்த முடியாத சிறு குற்றங்கள் புரிந்த சிறைக்கைதிகள் ஏழு பேரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை சிறைச்சாலையில் இருந்து கைதிகளை விடுதலை செய்யும் நிகழ்வு சிறைச்சாலை அத்தியட்சகர் வசந்த குமார டேப் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜெயிலர்கள், புனர்வாழ்வு அதிகாரிகள் மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



தைப்பூச தினத்தை முன்னிட்டு மயிலம்பாவெளி சிவராம் ஊடகவியலாளர் மாதிரிக் கிராமத்தில் நேற்று (05) மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு.ஊடக அமையம் மற்றும் கிழக்கு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியன ஒன்றிணைந்து பொங்கல் பொங்கி கொண்டாடினர். (கல்லடி செய்தியாளர்)



# காற்றில் கலந்த கான சரஸ்வதி

## வாணியின் கையில் சேராது ஏங்கும் பத்மபூஷன்

இந்திய திரையுலகில் கான சரஸ்வதியாக புகழப்பட்ட பழம்பெரும் பாடகி வாணி ஜெயராம் தனது 78ஆவது வயதில் நேற்றுமுன்தினம் காலமானார்.

தனது காந்தக்குரலால் தமிழ், ஹிந்தி, தெலுங்கு, கன்னடம், குஜராத்தி, பெங்காளி என 19 மொழிகளில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காலத்தால் அழியாத பாடல்களைப் பாடி எம்மை கட்டிப்போட்டவர்.

'கான சரஸ்வதி'யாக இசை ரசிகர்களால் கொண்டாடப்பட்ட வாணி ஜெயராம், 3 தேசிய விருதுகள், 4 மாநில அரசுகளின் விருதுகளைப் பெற்றவர். ஏராளமான பாராட்டுகளைப் பெற்றுள்ளார்.

தமிழகத்தின் வேலூரில் பிறந்து இந்திய இசை ரசிகர்களின் மனதில் மல்லிகையாய் மனம் வீசிய வாணி ஜெயராமுக்கு இந்திய குடியரசு தினத்தன்று பத்மபூஷண் விருது அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள வீட்டில் நெற்றியில் காயத்துடன் வாணி ஜெயராம் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

வாணி ஜெயராமின் மறைவு இசையுலகினரையும், திரையுலகினரையும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.

நேற்றுக் காலை வாணி ஜெயராமின் உடலுக்கு தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், ஆளுநர் ரவி உள்ளிட்டோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

பழம்பெரும் பின்னணிப் பாடகி வாணி ஜெயராமின் இசைப் பணிகளை கௌரவிக்கும் விதமாக காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார்.

இந்நிலையில், காவல்துறை மரியாதையுடன் வாணி ஜெயராமின் உடலுக்கு நேற்று இறுதிச்சடங்குகள் நடைபெற்றன.

தொடர்ந்தும் திரையுலகினர், இசையுலகினர் என நேரில் சென்று மறைந்த பாடகி வாணி ஜெயராமுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

அவரது மறைவுக்கு இந்திய பிரதமர் மோடி, தமிழக முதலமைச்சர் உள்ளிட்ட பல அரசியல்வாதிகளும், இசை உலகினரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

**வேலூரில் அவதரித்த கலைவாணி**

1945ஆம் ஆண்டு நவம்பர் 30ஆம் திகதி வேலூரில் துரைசாமி அய்யங்கார் - பத்மாவதி தம்பதிக்கு கலைவாணி என்ற மகள் பிறந்தார். கடலூர் ஸ்ரீனிவாச அய்யங்கார், டி.ஆர்.பாலசுப்ரமணியம், ஆர்.எஸ்.மணி ஆகியோரிடம் கர்நாடக இசையைப் பயின்றார். சென்னைக்கு படிக்க வந்தவர், ராணி மேரி கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்தார். பாரத ஸ்டேட் வங்கியில் வேலை கிடைத்தது. ஜெயராம் என்பவரை திருமணம் செய்தார். பின்னர் பணியிட மாறுதல் கிடைத்ததால் மும்பையில் வசித்தார். 'கலைவாணி' என்ற தனது பெயரை 'வாணி' என சுருக்கிக்கொண்டார். வாணி ஜெயராமின் இசைத் திறமைக்கு அவரது கணவர் ஜெயராம் உதவியாக இருந்தார். இதனால் திருமணத்துக்குப் பின்னர் உஸ்தாத் அஹ்மத் கானிடம் முறையாக இந்துஸ்தானி இசை கற்றுக்கொண்டார். வங்கி வேலையை இராஜினாமா செய்துவிட்டு இசை நிகழ்ச்சிகளில் பாட ஆரம்பித்தார். பெரும்பாலும் கர்நாடக இசைப் பாடல்களை பாடி வந்தார்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் அவரது குரலைக் கேட்டு திரையுலகினர் மெய்மறந்தனர். 1971ஆம் ஆண்டில் ஹிந்தியில் வெளியான 'குட்டி' படத்தில், வசந்த் தேசாயின் இசையில் 'போலே ரே பப்பி ஹரா...' என்ற பாடலை பாடினார். இதுதான் அவரது சினிமா பிரவேசத்துக்குக் காரணமாக அமைந்த திரைப்படம். இந்தப் பாடல் மெகா ஹிட்டானது.

**வாலியின் வரிகளில் மணந்த மல்லிகை**

இதையடுத்து தமிழகத்திலிருந்து சென்று ஹிந்தியில் வெற்றிக்கொடியை நாட்டிய வாணி ஜெயராமை தமிழ் இசையமைப்பாளர்கள் மணக்கும் மல்லிகையாய் மனம் வீசச் செய்தனர்.

***'ஏழு ஸ்வரங்களுக்குள்...', 'மழைக்கால மேகம் மகராஜன் வாழ்க...', 'முத்தமிழில் பாடவந்தேன்...'*** என தமிழில் அடுத்தடுத்து ஹிட் பாடல்களைப் பாடினார். 1974ஆம் வருடம் தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் ரிலீஸ் ஆன 'தீர்க்க சுமங்கலி' படத்தில் இடம்பெற்ற கவிஞர் வாலியின் 'மல்லிகை என் மன்னன் மயங்கும் பொன்னான மலரல்லவோ...' என்ற பாடல் வாணி ஜெயராமை பிரபலமாக்கியது. தமிழ் ரசிகர்களின் விருப்பமான பாடகியாக அவர் மாறிப்போனார்.

'அபூர்வ ராகங்கள்' படத்தில் இடம்பெற்ற ***'ஏழு ஸ்வரங்களுக்குள்...'*** 'சங்கராபரணம்' படத்தில் இடம்பெற்ற ***'மானஸ ஸஞ்சரரே...'***, 'ஸ்ருதிலயாலு' தெலுங்குப் படத்தில் இடம்பெற்ற ***'ஆலோகயே ஸ்ரீ பாலகிருஷ்ணம்...'*** ஆகிய பாடல்களுக்காக மூன்று முறை சிறந்த பின்னணிப் பாடகிக்கான தேசிய விருதை பெற்றவர்.

'நெஞ்சமெல்லாம் நீயே' படத்தில் சங்கர் கணேஷ் இசையில் ***'யாரது சொல்லாமல் நெஞ்சள்ளிப் போவது...'***, 'நீயா' படத்தில் ***'ஒரே ஜீவன் ஒன்றே உள்ளம்...'***, 'பாலைவனச் சோலை'யில் ***'மேகமே மேகமே....'***, 'புனித அந்தோனியார்' படத்தில் ***'மண்ணுலகில் இன்று தேவன் இறங்கி வருகிறார்...'***, பி. சுசீலாவுடன் இணைந்து 'பாத பூஜை' படத்தில் ***'கண்ணாடி அம்மா உன் இதயம்...'***, 'அந்தமான் காதலி'யில் ***'நினைவாலே சிலை செய்து...'***, 'சினிமாப் பைத்தியம்' படத்தில் ***'என் உள்ளம் அழகான வெள்ளித்திரை...'***, 'தங்கப்பதக்க'த்தில் ***'தத்திச் செல்லும் முத்துக் கண்ணன் சிரிப்பு...***, 'பாலாபிஷேக'த்தில் ***'ஆலமரத்துக் கிளி...'*** என ஹிட்டுக்கு மேல் ஹிட் பாடல்களைக் கொடுத்து அசத்தினார் வாணி ஜெயராம்.

ஒவ்வொரு பாடலையும் உள்ளத்தின் அடியில் இருந்து உணர்வுபூர்வமாக பாடுவதில் வல்லவர் வாணி ஜெயராம். ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை ராகம் என்று அவரது பாடல்கள் ஒவ்வொன்றும் ரசிகர்களை உருகவைத்தன. டுயட் பாடல்களில் அவரது குரல் ரசிகர்களை உற்சாகப்படுத்தும்.

தமிழில் எம்.எஸ்.விஸ்வநாதன், இளையராஜா, தேவா, ஏ.ஆர்.ரஹ்மான் என பல இசையமைப்பாளர்களிடம் பல ஹிட் பாடல்களைப் பாடியுள்ளார்.

தமிழில் சிங்கிள் டேக் சிங்கர் என பெயரெடுத்த பெருமைக்குரிய பாடகி வாணி ஜெயராம் மட்டுமே.

வாணி ஜெயராம் பாடகி என்பது மட்டுமே வெளியுலகிற்கு தெரிந்த விடயம். ஆனால், அவர் ஒரு மிகப்பெரிய ஓவியக் கலைஞராவார். நிறைய புகைப்படங்களை அவர் வரைந்து வைத்துள்ளார். சினிமாவிற்கு வராமல் இருந்திருந்தால் ஓவியராகக்கூட பெயர் எடுத்திருப்பார்.

கடவுள் சரஸ்வதி தேவியின் பூரண அருள் பெற்ற ஒரு பின்னணிப் பாடகி வாணி ஜெயராம் என்றால் மிகையல்ல.

**கையில் சேராத 'பத்மபூஷன்**

தமிழ், ஹிந்தி, தெலுங்கு, கன்னடம், குஜராத்தி, பெங்காளி என 19 மொழிகளில் 10 ஆயிரம் பாடல்களைக் கடந்து பாடி இருந்தாலும் அவர் பாடிய பக்திப் பாடல்கள் இன்றும் பிரபலமானவை.

ஏற்கனவே இந்திய மத்திய அரசின் பத்மஸ்ரீ விருதைப் பெற்ற வாணி ஜெயராமுக்கு இந்த ஆண்டு இந்திய குடியரசு தினத்தன்று 'பத்மபூஷன்' விருது அறிவிக்கப்பட்டது. எனினும், இவ்விருது அவரின் கைகளில் சேர்வதற்குள் இவ்வுலகை நீத்துள்ளார் வாணி.

**நெற்றியில் காயத்துடன் கிடந்த வாணி ஜெயராம்**

சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள வீட்டில் தனியாக வசித்துவந்த பிரபல சினிமா பின்னணிப் பாடகி வாணி ஜெயராம் நெற்றியில் காயத்துடன் வீட்டில் மர்மமான முறையில் உயிரிழந்து கிடந்துள்ளார். பூட்டிய வீட்டின் கதவை உடைத்து திறந்து சடலத்தைக் கைப்பற்றி பொலிஸார் விசாரித்து வருகின்றனர்

வாணி ஜெயராம், சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வந்தார். 10 வருடங்களுக்கு முன்னர் கணவர் இறந்த நிலையில், வீட்டில் தனியாக வசித்து வந்த வாணி ஜெயராம் வீட்டின் கதவு உள்பக்கமாக பூட்டியிருந்தது.

காலையில் வழக்கம்போல் வேலைக்கு வந்த பணிப்பெண் தட்டிப்பார்த்தும் கதவு திறக்கப்படாததால் ஆழ்வார்பேட்டையிலுள்ள அவரது சகோதரி உமாவுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

அவர் வந்து அப்பார்ட் மெண்ட் எசோசியேஷன் உதவியுடன் மாற்று சாவியை எடுத்துவந்து பொலிஸார் முன்னிலையில் வீட்டின் கதவைத் திறந்து உள்ளே சென்று பார்த்த போது, நெற்றியில் காயத்துடன் வாணி ஜெயராம் சடலமாகக் கிடப்பது தெரியவந்தது.

இதையடுத்து வீட்டிற்குள் யாராவது இருக்கின்றனரா என்பதை தீவிரமாக ஆய்வுசெய்த பின்னர் பொலிஸார் வாணி ஜெயராமின் சடலத்தைக் கைப்பற்றி பிணகூராய்வுக்காக அனுப்பிவைத்தனர். தடயவியல் துறையினரை வரவழைத்து வாணி ஜெயராம் வீட்டில் கைரேகைகள் சேகரிக்கப்பட்டன.

78 வயதானாலும் வாணி ஜெயராம் ஆரோக்கியமான நிலையில் இருந்ததாக பணிப்பெண் வாக்குமூலமளித்த நிலையில், வாணி ஜெயராமின் மரணம் இயற்கைக்கு மாறானது என்ற பொருளில் சந்தேக மரணம் என்று வழக்கு பதிவுசெய்து விசாரித்து வருவதாக தெரிவித்தனர்.

இந்நிலையில், தலையில் ஏற்பட்ட காயமே வாணி ஜெயராமின் உயிரிழப்புக்குக் காரணம் என பிரேத பரிசோதனையின் முதற்கட்ட அறிக்கையில் தகவல் தெரிவித்துள்ளனர்.

வாணியின் கணவர் முன்பே இறந்துவிட்டார். குழந்தைகள் கிடையாது. தமிழ், தெலுங்கு, ஹிந்தி, மலையாளம், கன்னடம் உட்பட 19 மொழிகளில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களை அவர் பாடியுள்ளார். வாணி ஜெயராமின் மறைவுக்குத் திரையுலகினர் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

**மோடி இரங்கல்**

பாடகி வாணி ஜெயராம் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து பிரதமர் மோடி தனது ட்விட்டர் பக்கத்தில்,

''திறமையான வாணி ஜெயராம் ஜி, பல்வேறு மொழிகளை உள்ளடக்கிய மற்றும் பல்வேறு உணர்வுகளைப் பிரதிபலிக்கும் அவரது இனிமையான குரலால் நினைவுகூரப்படுவார். அவரது மறைவு படைப்புலகிற்கு பெரும் இழப்பாகும். அவரது குடும்பத்தினருக்கும், ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, சென்னை நுங்கம்பாக்கம் வீட்டில் வைக்கப்பட்டிருந்த வாணி ஜெயராமின் உடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

இந்நிலையில், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், ''இந்தியத் திரையுலகின் புகழ்பெற்ற இசைக்குயிலாக விளங்கிய பின்னணிப் பாடகி, கலைவாணி என்ற திருமதி வாணி ஜெயராம் மறைவுற்ற செய்தி அறிந்து மிகவும் வருந்தினேன். திருமதி வாணி ஜெயராம் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்''என தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று கேரள ஆளுநர் ஆரிப் முகமது கான், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் மற்றும் பிரபல பாடகி கே.எஸ்.சித்ரா, பாடகர் மனோ, இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான், இசைஞானி இளையராஜா, தேனிசைத் தென்றல் தேவா, இயக்குநர் பாக்கியராஜ் உள்ளி பலரும், நடிகரும், மக்கள் நீதி மய்யம் தலைவருமான கமல்ஹாசன், நடிகை குஷ்பு, ராதிகா உள்ளிட்ட பல திரை நட்சத்திரங்களும் தமது இரங்கல்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், பின்னணிப் பாடகி கே.எஸ்.சித்ரா வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், ''வாணி அம்மாவின் திடீர் மரணம் குறித்து கேள்விப்பட்டு மிகுந்த அதிர்ச்சியடைந்தேன். இரண்டு நாட்களுக்கு முன்புதான் அவரிடம் பேசினேன். நிஜமான லெஜண்ட். வலுவான கிளாசிக்கல் அடித்தளத்துடன் கூடிய பல்துறை மற்றும் பன் மொழி பாடகியாவார். அவரது ஆன்மா சாந்தியடைய வேண்டுகிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வாணி ஜெயராமின் மறைவுக்குத் தமிழ்த் திரையுலகினர், இசையுலகினர், இசை ரசிகர்கள், அரசியல்வாதிகள் என பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

வாணி ஜெயராமின் மறைவு இசை உலகிற்கு பேரிழப்பு என்றாலும் அவரது காந்த கானங்களால் அவர் குரல் என்றென்றும் நம்மிடையே ஒலித்துக்கொண்டிருக்கும்!

# 2023 ஆசியக் கிண்ணம்

## பாகிஸ்தானில் இல்லையென்பது உறுதி!




இந்தாண்டு பாகிஸ்தானில் நடைபெறுவதாக இருந்த ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் பாகிஸ்தானிலிருந்து மாற்றி ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு மாற்ற ஆசிய கிரிக்கெட் கவுன்சில் முடிவெடுத்திருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஆசிய கிரிக்கெட் கவுன்சிலின் உறுப்பு நாடுகள் அனைத்தும் பங்கேற்ற அவசர கூட்டமானது, சனிக்கிழமை பஹ்ரைனில் பிசிசிஐ செயலாளர் ஜெய் ஷா மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் கவுன்சில் தலைவர் சேதி தலைமையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்கு பிறகு ஆசியக் கிண்ணத்தை நடத்தும் முழு விவரம் குறித்து எதிர்வரும் மார்ச் மாதம் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ஆசியக் கிண்ணத் தொடரானது 2023ஆம் ஆண்டு செப்டெம்பரில் பாகிஸ்தானில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், பிசிசிஐ செயலாளரும், ஆசிய கிரிக்கெட் கவுன்சில் தலைவருமான ஜெய்ஷா பாகிஸ்தானில் நடக்கும் ஆசியக் கிண்ணத்தில் பாகிஸ்தான் - இந்தியா ஆகிய இரு நாடுகளுக்குமிடையேயான அரசியல் பதற்றம் காரணமாக இந்தியா பங்கேற்காது என தெரிவித்தார்.

இந்நிலையில், தற்போது நடைபெற்ற கூட்டத்திற்கு பிறகு ஆசிய கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், தொடரை நடத்துவதை உறுதிசெய்யும் நோக்கில் அதற்கான செயற்பாடுகள், காலக்கெடு மற்றும் மற்ற முக்கிய விவரங்கள் பற்றிய விவாதங்களைத் தொடர்ந்து மேற்கொள்ள சபை சம்மதித்துள்ளது. ஆசியக் கிண்ணம் குறித்த முக்கியமான முடிவுகள் மார்ச் மாதம் மீண்டும் நடத்தப்படும் அடுத்த கூட்டத்தில் முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

**விளையாட்டு செய்திகள்**

thamilansports@gmail.com


# இலங்கை - நியூசிலாந்து தொடருக்கான உள்ளூர் தொலைக்காட்சி பங்காளர் அறிவிப்பு

இலங்கை கிரிக்கெட் அணியானது எதிர்வரும் மார்ச் மாதம் நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு மிக முக்கிய டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இரு போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடர் மற்றும் ஒருநாள், இருபதுக்கு 20 சர்வதேச தொடர்களில் ஆடவுள்ளது.

இந்நிலையில், குறித்த சுற்றுப்பயணத்திற்கான உள்ளூர் தொலைக்காட்சி பங்காளராக சுப்ரீம் ரிவி அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் சுற்றுப்பயணம் மார்ச் 09ஆம் திகதி ஆரம்பமாகி 2023 ஏப்ரல் 08ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

நியூசிலாந்து சுற்றுப்பயணத்தில் இலங்கை அணி தலா 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் ரி20 போட்டிகளில் விளையாடவுள்ளது.

# சவூதி மண்ணில் முதல் கோலடித்த ரொனால்டோ




சவூதி லீக்கில் முதல் கோல் அடித்ததில் மகிழ்ச்சி என கிறிஸ்ரியானோ ரொனால்டோ சமூக வலைதளப்பக்கத்தில் பதிவிட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை அல்-பாடெஹ் அணிக்கு எதிரான போட்டியை ரொனால்டோவின் அல்-நஸர் அணி சமன் செய்தது. இந்தப் போட்டியில் தோல்வி நிலையில் இருந்த அல்-நஸர் அணியை, பெனால்டி வாய்ப்பை பயன்படுத்தி ரொனால்டோ காப்பாற்றினார்.

சவூதி அரேபியாவில் அல்-நஸர் அணிக்காக ரொனால்டோ அடித்த முதல் கோல் இதுவாகும். இந்நிலையில், ரொனால்டோ வெளியிட்ட பதிவில், சவூதி லீக்கில் எனது முதல் கோலை அடித்ததில் மகிழ்ச்சி மற்றும் மிகவும் கடினமான போட்டியில் ஒரு முக்கியமான டிராவை அடைய மொத்த அணியும் பெரும் முயற்சி செய்துள்ளது என தெரிவித்துள்ளார்..

# பாலமுனை சுப்பர் ஓர்க்கிட் விளையாட்டுக் கழகத்தின் நான்காவது புதிய சீருடை அறிமுகம்





(றியாஸ் இஸ்மாயில்)

பாலமுனை சுப்பர் ஓர்க்கிட் விளையாட்டுக் கழகத்தின் நான்காவது புதிய சீருடை அறிமுகம் செய்துவைக்கும் நிகழ்வு கழகத்தின் தலைவர் எம்.எச்.நிஸார்தீன் ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது.

பாலமுனை 02ஆம் பிரிவு கிராம அபிவிருத்தி சங்கக் கட்டடத்தொகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அனுசரணையாளர் எச்.எம்.ரேடேஸ் உரிமையாளரும், கழகத்தின் உபதலைவருமான எச்.எம்.அன்சார் மற்றும் கழக ஆலோசகர்களான அதிபர் பீ.முஹாஜிரீன் பொறியியலாளர் எம்.எச்.நௌசாத் கலந்துகொண்டு புதிய சீருடையை அறிமுகம் செய்துவைத்தனர்.

இந்நிகழ்வில் கழகத்தின் செயலாளர் ஜே.சிப்னாஸ், பொருளாளர் கே.எல்.ஹர்சான், முகாமையாளர் எஸ்.எச்.முர்ஸித், நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட வீரர்களும் பொதுச் சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7